# எட்டாவது அதிசயம்

ரஜினி பெத்துராஜா

# எட்டாவது அதிசயம்

ரஜினி பெத்துராஜா

நிலா புக்ஸ்

முகவரி

Nilacharal Ltd
18 Collingwood Road
Crawley
RH10 7WG
UK
E-mail: team@nilacharal.com

| | | |
|---|---|---|
| நூல் தலைப்பு | : | எட்டாவது அதிசயம் |
| ஆசிரியர் | : | ரஜினி பெத்துராஜா |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பகம் | : | நிலாச்சாரல் லிமிடட் |
| காப்புரிமை | : | ஆசிரியருக்கு |
| பதிப்பாசிரியர் | : | நிலா |

"உலகம் முழுவதும் பரவியுள்ள தமிழ் சமுதாயத்திற்கு தமிழ் இலக்கியங்களை படிக்க வாய்ப்பளிப்பதும், வளரும் எழுத்தாளர்களை ஊக்கப்படுத்துவதும், வருங்கால சந்ததிகளுக்கு தமிழ் இலக்கிய பொக்கிஷங்களை பாதுகாத்துத் தருவதுமே 'நிலா புக்ஸ்' -ன் இலட்சியம் "

**TERMS OF USE:**

- You may not sell, exchange, distribute or otherwise transfer this book in any form what so ever.
- You may make one (1) printed copy of this book for your personal use. You may not sell, exchange, distribute or otherwise transfer this copy to any other person for any reason.
- You may make one (1) electronic copy each of this book for archival purposes. Except for the single (1) permitted print copy and the single (1) archival copy, you may not make any other copies of this book in whole or in part in any form.

*******

**உபயோக நிபந்தனைகள்**

- நீங்கள் இந்த நூலை எந்த வடிவத்திலும் விற்கவோ, பண்ட மாற்றம் அல்லது விநியோகம் செய்யவோ அல்லது வேறு எந்த விதத்தில் கைம்மாற்றுவதோ கூடாது.
- நீங்கள் இந்த நூலின் ஒரு (1) பிரதியை உங்கள் சொந்த உபயோகத்துக்கு அச்சிட்டுக் கொள்ளலாம். அந்த அச்சுப்பிரதியை எந்த ஒரு நபருக்கும் எக்காரணம் கொண்டும் விற்கவோ, பண்ட மாற்றம் அல்லது விநியோகம் செய்யவோ அல்லது வேறு விதத்தில் கைமாற்றுவதோ கூடாது.
- நீங்கள் இந்நூலின் ஒரு (1) மின் பிரதியை ஆவணத்திற்காக உருவாக்கிக் கொள்ளலாம். ஒரே ஒரு (1) அனுமதிக்கப்பட்ட அச்சுப் பிரதியையும் ஒரே ஒரு (1) ஆவணப் பிரதியையும் தவிர இந்நூலின் முழுதையுமோ அல்லது பாகத்தையோ எவ்விதத்திலும் வேறு பிரதிகள் எதுவும் எடுக்கக்கூடாது.

*******

## அணிந்துரை

## (குறிஞ்சித் தாத்தாவும் பேரன் பேத்திகளும் கவிதை உரையாடல்)

**ஸ்ரீநிதி:**

*தாத்தா நீங்கள் ஐந்தருவி*
*சங்கராஸ் ஸிரமம் சென்றதுமே*
*பேத்தி பேரர் நாங்களெலாம்*
*பிடித்து ஆடிக் கொண்டிருந்தோம்*

*குழந்தைக் கதைகள் பிரதிகளை*
*கொண்டு வந்தார் ரஜினியம்மா*
*அழகிய கதைகளை நாங்களுமே*
*ஆனந்தமாகப் படித்துவிட்டோம்*

**ராகுல்:**

*எட்டாம் அதிசயம் கதையினிலே*
*ஏற்ற மதங்களின் ஒற்றுமையால்*
*கெட்டிக்கார மாணவர்கள்*
*தொட்டு விட்டனர் மனங்களையே*

*கவரி மான்கள் கதையினிலே*
*கனிந்த அன்பு ஆசிரமம்*
*எவருமற்ற குழந்தைகளில்*
*இனிய இயல்புகள் நீங்காதே*

*நாளெல்லாம் நல்ல நாள் கதையில்*
*நமது நாடும் பிறநாடும்*
*பிள்ளைகள் பெற்றோர் பாசங்களை*
*பெரிதும் சிறப்பாய் சொல்கிறதே*

**ஹரிஸ்:**

*மனிதம் மிகச்சிறு கதையினிலே*
*மாணவர் ஆடம் பரப்பொருளால்*
*இனிய நிம்மதி இழப்பினையே*
*இயல்பாய் சொல்லுதல் மிகஅருமை*

*அக்கினிக் குஞ்சொன்று கண்டேனில்*
*அடிகள் காந்தியின் சிலையருகே*
*பக்குவமாய் விளையாடுதலை*
*பகரும் விதமே மிக நன்றே*

*வீர விளையாட்டு கதையினிலே*
*வீரன் இளங்கோ மாணவனும்*
*விட்டுக் கொடுக்கும் செயலிதுவே*
*வெகுவாய் என்னை கவர்ந்ததுவே*

**ராஜ்யஸ்ரீ:**

*அழகான அடிச்சுவடுகள் கதையில்*
*அம்மா மகளது உறவுகளும்*
*பழி வராமல் நாட்டுக்கே*
*பார்த்தே ஆடச் சொல்கின்றாள்*

*தெளிவு பெற்ற மதியினாய்*
*சிறப்புக் கதையில் அம்மாவின்*
*தளிராம் மடியே சுவர்க்கமென*
*தகுதிக் கட்டுரைக்கே பரிசாம்*

*கற்பனையோ கைவண்ணமோ கதையில்*
*தொலைக்காட்சி மாணவர் நேர்காணல்*
*அற்புத சித்தரிப்பு தடைமீறி*
*அளித்த பேட்டி மிக நன்றாம்*

**ஸ்ரீநிதி:**

*படிக்கும் இயந்திரங்கள் கதையில்*
*படிக்கும் மாணவரை இயந்திரமாய்*
*படிபடி என்றுயிர் வாங்காமல்*
*இயல்பாய் ஊக்கம் தருமருமை*

*மற்றக் கதைகளும் இதுபோல*
*மாணவர் நலம்பெற வெற்றிபெற*
*உற்ற கதைகளே மிகசிறப்பே*
*உங்கள் கருத்தே என்னதாத்தா*

**குறிஞ்சித்தாத்தா:**

*அருமைச் செல்லக் குழந்தைகளே*
*அத்துணை கதைகளும் படித்தேதான்*
*பெருமை யாகவே சொன்னீர்கள்*
*பிரிய வாழ்த்தே உங்களுக்கே*

*குழந்தை இலக்கியம் தாய்பாசம்*
*குழந்தைக் கவிஞர் வள்ளியப்பா*
*அழகாய்ச் சொன்னார் அதன்வழியே*
*அளித்தார் ரஜினி பெத்துராஜா*

*நாளைய தலைவராம் சிறுவருக்கே*
*நல்லதை மட்டுமே சொலவேண்டும்*
*மூளை தெளிவுறும் என்றாராம்*
*முனைவர் நமது பூவண்ணன்*

*நமது ரஜினி பெத்துராஜா*
*நல்ல தாயுள்ளம் கொண்டவராய்*
*அமைந்த பாப்புராஜா பள்ளிதனின்*
*அருமை புரவலர் ஆனவராம்*

*எதிரே மைதானம் அங்காடும்*
*இனிய சிறுவர் விளையாட்டை*
*புதிதென தினமும் பார்த்திடுவார்*
*பூரிப் படைவார் குழந்தையென*

*குழந்தை இயல்புடன் வாழ்பவராம்*
*குழந்தைகளோடு தினம் பழகிடுவார்*
*குழந்தை இலக்கியம் சிறப்புடனே*
*படைத்திட இதுவே காரணமாம்*

*பரிசுகள் விருதுகள் பலபெற்றார்*
*பண்பும் அன்பும் நிறைந்தவராம்*
*அரிதாய் அழகிய கதைபடைக்கும்*
*ஆற்றல் வளரப் பெற்றவராம்*

*இந்தச் சிறுவர் கதைநூலே*
*இனிதாம் புத்தகப் பெயர்போடுக*
*விந்தை யாகவே உளதென்றார்*
*நமது ராஜேஸ் வரியம்மா*

*ரஜினி பெத்து ராஜாவின்*
*நற்படைப் புலகப் புகழ்பெறணும்*
*ரஜினி அம்மாவை வாழ்த்திடுவோம்*
*நூறுநூல் எழுதிட வாழ்த்திடுவோம்*

குறிஞ்சிச்செல்வர்
**கொ.மா.கோதண்டம்**

பூங்குன்றம்
குறிஞ்சித் தெரு – முத்துநகர்
P.S.K. நகர் அஞ்சல்
ராஜபாளையம் 626108.

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | எட்டாவது அதிசயம் | 1 |
| 2. | அழகான அடிச்சுவடுகள் | 4 |
| 3. | கவரிமான்கள் | 7 |
| 4. | படிக்கும் இயந்திரங்கள் | 10 |
| 5. | அக்கினிக் குஞ்சொன்று கண்டேன் | 13 |
| 6. | தாய் மண்ணே வணக்கம் | 16 |
| 7. | வீர விளையாட்டு | 19 |
| 8. | கற்பனையோ கைவண்ணமோ | 22 |
| 9. | நாளெல்லாம் நல்ல நாள் | 26 |
| 10. | மனிதம் | 29 |
| 11. | பொற்காலங்கள் | 30 |
| 12. | மாறிவரும் கோணங்கள் | 33 |

# எட்டாவது அதிசயம்

“என்ன நான்ஸி ரெடியா... டாக்ஸி வந்து அரைமணி நேரம் ஆகப்போகுது...” தன் மனைவியை அவசரப்படுத்தினார் திலக்ராஜன்.

“ரெடி... ரெடி... கொஞ்சம் இருங்க சாப்பாடு எல்லாம் தயார். பக்கத்து கடைல குழந்தைகளுக்குத் தட்டு வடை, முறுக்கு எல்லாம் சொல்லி இருக்கிறேன். பத்து நிமிஷத்தில வந்துடும்” என்றார் மனைவி நான்ஸி.

“அப்ப சரி... சாக்லேட், பிஸ்கட் எல்லாம் வாங்கியாச்சில்லே...”

“ம்...”

“புதுத் துணிங்களை தனியா வை.”

“எல்லாம் முடிச்சாச்சு... ஏங்க நம்ம தோட்டத்துல இருக்கிற இளநீர் கொய்யா எல்லாத்தையும் கார்ல போட்டுக்கவா?”

“அட ! இதை ஏன் கேட்டுக்கிட்டு... சாப்பிடற வயசு... இதெல்லாம் எந்த மூலைக்கு?”

காரில் ஏறியாய்விட்டது.

“டிரைவர்... பட்டாசு கடைகிட்ட நிறுத்துப்பா...” என்றபடி ராஜன் இறங்கத் தயாரானார்.

எத்தனை ரக பட்டாசுகள்... தரைச்சக்கரம், மத்தாப்பு, புஸ்வாணம், சீனி வெடி தவிர இன்னும் புதிது புதிதாக நிறையவே இருந்தன. அவருக்கும் குழந்தைகளைப் போல குஷி. ஒரு பெரிய பெட்டியே காரில் ஏற்றப்பட்டது.

“முன்சீட்ல இருக்குற துணிகளை எடுத்துக்காட்டேன். நேத்து வாங்கறப்பகூட பார்க்க முடியல்லே... அவசரம் அவசரமாக வாங்க வேண்டியதாப் போச்சு” ராஜன் கேட்க,

“இதோ பாருங்க... புடிச்சுருக்கா?” ஆர்வத்துடன் கேட்டார் நான்ஸி.

“சும்மா சொல்லக்கூடாது... உன் செலக்ஷன் நல்லாவே இருக்கு. அசத்திட்டே போ...”

ஒரு நீண்ட பயணம். ஒரு பெரிய பள்ளியின் முன்வந்து நின்றது கார். பள்ளிக்கு விடுமுறை. அதனால் எங்கும் நிசப்தம். பக்கத்துக் காம்பவுண்டிற்குள்தான் ஹாஸ்டல் இருக்கிறது.

கார் வந்து நின்றதும், மாணவர்கள் ரஹீம், ஜோசப், அமர், சந்தோஷ், விமல் எல்லோரும் ஜன்னல் வழியாக எட்டிப்பார்த்தார்கள். வெளியே எங்காவது போய்விட்டு வரலாம் என்று கிளம்பிக் கொண்டிருந்தார்கள். வார்டனிடமும் கேட்டாகி விட்டது.

“டேய்... ஜானியோட பேரன்ட்ஸ் வர்றாங்கடா...”

“ஜானி தான் இல்லையே... விடுமுறைக்கு அவங்க மாமா சென்னைக்கு வரச்சொல்லிட்டாங்களே...” என்றான் விமல்.

“அவன் அம்மா, அப்பாகிட்டே சொல்லிட்டு போயிருக்கலாமில்லே பாவம்! அவங்களை ஏன் இவ்வளவு தூரம் அலைய வச்சுகிட்டு... அவங்க அம்மாக்கு கூட இடுப்பு வலின்னு சொன்னானே. இதுல இவ்வளவு தூரம் கார்லே வந்திருக்காங்க...” கவலைப்பட்டான் ரஹீம்.

“சரி... வந்தவங்களுக்கு என்ன தரலாம் சொல்லுங்க. மெஸ்கூட இல்லை இன்னிக்கு” அவசரப்படுத்தினான் சந்தோஷ்.

“வரவேற்பு அறையிலே உட்கார்ந்திருப்பாங்க... நம்மகிட்டே ஹார்லிக்ஸும் வெந்நீரும் இருக்கு... கலந்து தந்துடலாம் வாங்க...” அமர் சொன்னதை ஏற்று ஹார்லிக்ஸ் கலந்து கொண்டு வந்தார்கள் குழந்தைகள்.

“வணக்கம் அங்கிள்... வணக்கம் ஆன்ட்டி...” கூப்பிட்டதும் திரும்பினார்கள் ராஜனும் நான்ஸியும்.

“வணக்கம்பா. வாங்க... வாங்க... நல்லா இருக்கீங்களா சாப்பிட்டீங்களா?”

“ஓ! சாப்பிட்டோம். நீங்க ஹார்லிக்ஸ் சாப்பிடுங்க... அங்கிள் ஜானி...” என்று ஏதோ சொல்ல வந்தார்கள் குழந்தைகள்.

“இந்த டிபன், ஸ்வீட்ஸ் எல்லாம் எடுத்து வைங்கப்பா.” அவர்கள் சொன்னது அவர் காதில் விழுந்ததாகத் தெரியவில்லை.

“அங்கிள்... ஜானி... இங்கே... ஹாஸ்டல்லே இல்லே....”

“தெரியும்பா...”

“தெரியுமா பிறகு ஏன் அங்கிள்...”

வேகமாக வந்தார் நான்ஸி. “ஏம்பா, ஜானி இல்லைன்னா வரக்கூடாதா?”

“வரலாம்... ஆனா...”

“ஆமாம்... அவனை அவன் மாமா அதான் எங்க அண்ணன் தீபாவளிக்கு லீவு இருக்குன்னு கூப்பிட்டு விட்டாங்க... நீங்கள்ளாம் ஊருக்குப் போகலியாமே?”

“ஆமா. ஜோசப், ரஹீமிற்கு தீபாவளி இல்லை. ஆனாலும் லீவு எடுத்ததனாலே எழுத நெறய இருக்கு. அமர் சந்தோஷ் வீட்ல வெளியூர் போயிருக்காங்க. எனக்குக் கொஞ்சம் உடம்பு முடியல்லே...” என்றான் விமல்.

“உங்க ஊருக்குப் போகாட்டா என்ன? அது தான் நாங்க வந்துட்டோமே...?” என்றார் ராஜன் உற்சாகத்துடன்.

“உங்களுக்குத் தீபாவளி இல்லையே அங்கிள்...”

“எங்களுக்கு இல்லாட்டா என்ன உங்களுக்கு இருக்கில்லே...” உற்சாகத்துடன் தொடர்ந்தார் ராஜன்.

“நாங்களும் சென்னை போற பிளான்லதான் இருந்தோம் – ஜானியோட மாமா வீட்டுக்கு. அவரோட பசங்க ஜானியை, எங்களை ரொம்ப வற்புறுத்திக் கூப்பிட்டாங்க – தீபாவளி டைம்ல லீவு இருக்குமுன்னு...

உங்களுக்குத் தெரியுமா? உங்க நண்பன் ஜானியோட மெயில அப்பப்போ பார்ப்பேன். அப்படிப் பார்த்தப்போ நீங்க ஜானிக்கு எழுதியதைப் பார்த்தோம்''-

'நாங்க தீபாவளி விடுமுறையில தனியா ஹாஸ்டல்ல இருக்கப் போறோம். வீட்லேன்னா அம்மா அப்பாவோட அன்பு, கரிசனம் எல்லாவற்றையும் அனுபவிக்கலாம். ஒவ்வொருத்தருக்கும் ஒவ்வொரு பிரச்சினை. இந்த தீபாவளி சப்புனு இருக்கும். உன்னையும் நம்ம குரூப்லே மிஸ் பண்றோம். விடுமுறையை மாமா பசங்களோட அனுபவிக்கும்போது எங்களையும் நெனச்சுக்கோ. விடுமுறை வாழ்த்துக்கள்.'

''அதைப் பார்த்தும் தாங்க முடியல்லே எங்களாலே. எங்க பயணத்தை கேன்சல் பண்ணிட்டு, உங்களோட தீபாவளி கொண்டாட வந்துட்டோம். வளர்ற குழந்தைங்க ஏங்கிப் போயிடக்கூடாது. நிறைவா இளமையை அனுபவிச்ச சந்தோஷத்துல நாட்டுக்கு நல்லது பண்ணணும்.''

''அங்கிள்... ஆன்ட்டி ரொம்ப நன்றி'' என்றார்கள் மாணவர்கள் நெகிழ்வுடன்.

''தேங்க்ஸ் வேண்டாம்பா. எங்களுக்கு ஜானி வேற நீங்க வேற இல்ல. ஒவ்வொருத்தரும் எங்களுக்கு ஜானிதான்...'' ராஜன் சொன்னதும் அவரின் கைகளைப் பிடித்துக் கொண்டனர் குழந்தைகள்.

''சரி... எல்லோரும் புறப்படுங்க... நாம வெளியில கெஸ்ட் ஹவுஸ்ல தங்கப்போறோம். தீபாவளியை கொண்டாடப்போறோம். வார்டன்கிட்டே கேட்டாச்சு.''

அந்த கெஸ்ட் ஹவுஸில் குதூகலத்திற்குக் கேட்க வேண்டுமா? விமலைக் குணப்படுத்த டாக்டர் வரவழைக்கப்பட்டார். கஷாயம் எல்லாம் வைத்தார் நான்ஸி.

கிறித்துவர்கள் என்றாலும் மாவிலைத் தோரணம் கட்டினார் ராஜன். உடுப்புகளுக்கு மஞ்சள் தடவி விளக்கேற்றினார் நான்ஸி.

''ரஹீம்... ஜோசப்... நீங்களும் தீபாவளி கொண்டாடலாமில்லையா?''

''கட்டாயம் அங்கிள்... நீங்களும் கொண்டாடுகிறீர்களே. இந்த அன்பு எங்களை நெகிழ வைக்குது. நெறய பாடம் கத்துக் கொடுக்குது. அன்புக்கு முன்னாடி மதம், மொழி ஒண்ணுமே இல்லை... தீபாவளி தான் ரம்ஜான். ரம்ஜான் தான் கிறிஸ்துமஸ்; தீபாவளி...''

அப்போது ஜானி தொலைபேசியில் அழைக்க அனைவரும் மனமுருகிப் பேசினார்கள்.

''என்ன எல்லோரும் அப்பா, அம்மாவோட ஜாலியா இருக்கீங்களா... எல்லாம் அவங்க ஏற்பாடு தான்...''

''ஜானி... ஒண்ணு சொல்லட்டுமா?'' என்று ஆரம்பித்தான் அமர்.

இந்த அன்புக்கு ஈடா எதையுமே சொல்ல முடியாதுடா. எங்க நன்றிகளை வார்த்தையால மட்டும் சொல்லிட முடியாது. எங்களைப் பொறுத்த வரை... இதுவும் உலக அதிசயம்தான் ஆமாம்! எட்டாவது அதிசயம்.

❍❍❍

# அழகான அடிச்சுவடுகள்

**மா**டி ரூமில் போய் ஈமெயிலில் நண்பர்களுக்கு செய்திகள் அனுப்பி விட்டு டைனிங் ஹாலுக்கு வந்தேன். அம்மா எனக்கும் அப்பாவிற்குமாக தேநீர் கலந்து கொடுத்தாள். அவள் முகம் வித்தியாசமாகத் தெரிந்தது. அது சோகமா கோபமா என்று புரிய வில்லை.

ம்... கொஞ்ச நேரத்திற்கு முன் நான்கூட அப்படி நடந்து கொண்டிருக்கக்கூடாதோ. ஆனால் அம்மா என்றால் நிறைய உரிமை எடுத்துக் கொள்ளலாம் போல் தோன்றுகிறது. எதற்கெடுத்தாலும் சண்டை போடத் தோன்றுகிறது.

‘‘லீவெல்லாம் வேஸ்ட் ஆகிப்போகிறது பிரியன் நாலு விஷயங்களையும் தெரிஞ்சு வச்சுக்கணும். நிறைய புக்ஸ் படி. நல்ல தமிழ் பாட்டுகளை எல்லாம் தெரிந்து வைத்துக்கொள். கம்ப்யூட்டர் படிக்க போறது சரி. ஆனா சதா டி.வி.யிலேயே மூழ்கிப் போறது நல்லதில்லைப்பா.’’ இதை எங்கே அம்மா ஒரு தடவை சொன்னாள். ஒன்பது தடவை சொல்லி விட்டாள்.

‘‘ஷ்... சரிங்கறேன்லைம்மா? உனக்கு பாட்டுதானே சொல்லணும்... சொல்றேன்... சொல்றேன்’’ எனக்குக் கோபம் கோபமாய் வந்தது. லீவை எல்லாம் சரியா முழுசா அனுபவிக்க முடியதா? அப்பக்கூட அதைப் படி இதைப் படின்னு தொண தொணப்புகள்.

இரவு பத்துமணி. எனக்குப் பிடிச்ச சீரியல்கள் எல்லாம் டி.வி.யிலே முடிஞ்சுது. சரின்னு பாட்டு புத்தகத்தைக் தூக்கிக்கொண்டு அம்மாகிட்டே போனேன். அவள் படுக்கையை உதறி போட்டுக்கொண்டிருந்தாள்.

‘‘என்னம்மா, தூங்கப் போறீயா? பாட்டு சொல்லச் சொன்னியே?’’ அம்மா முறைத்தாள். ‘‘இன்னும் ராத்திரி பன்னெண்டு மணிக்கு வந்து சொல்லாமல் போனியே. மத்தியானம் எவ்வளவு நேரம் இருந்தது.’’

‘‘போ. இதுதான் வேண்டாங்கறது. எதுக்கெடுத்தாலும் கோபம். அந்த நேரம் கொஞ்சம் விளையாட வேண்டாமா? எப்ப சொன்னா என்ன? பாட்டு தெரிஞ்சுக்கணும் அவ்வளவுதானே? எப்படிச் சொன்னாலும் ஏற்றுக்கொண்டால் என்ன? முகம் இவ்வளவு மாற வேண்டுமா?’’

‘‘சரி... சரி சொல்லு கேட்கிறேன்.’’

‘‘**வெள்ளைத்தாமரைப் பூவிலிருப்பாள்**

**வீணை செய்யும் ஒலியிலிருப்பாள்**

**கொள்ளை யின்பம் நிலவு கவிதை...**’’

அம்மா குறுக்கிட்டாள்.

‘‘நிலவு இல்லை... குலவு கவிதை கூறு பாவலர் உள்ளத்திலிருப்பாள்’’ திருத்தினாள் அவள்.

‘‘இதற்குத்தான் தினமும் கொஞ்சநேரம் உட்காருன்னு சொல்றது. விட்டுப்போகாம இருக்கும்.’’

‘‘போம்மா பாட்டு சொல்லும்போதே இதை வேற சொல்லணுமா? என்கரேஜ் பண்ணமாட்டியே…’’

‘‘டேய்… டேய் நல்லாத்தான் சொன்னே. தினமும் பிராக்டிஸ் பண்ணினா நல்லதுன்னு சொல்ல வந்தேன்.’’

‘‘தெரியும்… தெரியும் என்கிட்டே ஏதாவது குறை கண்டுபிடிக்க வேண்டுமே.’’.. படபடத்தேன் நான்.

‘‘போதும்… போதும் பிரியன். நீ பாட்டே சொல்ல வேண்டாம். என்னை நீ புரிந்து கொள்ளவில்லை. உனக்கு சொல்லணும்னு தோணிணால் மட்டும் வா. நான் தொந்தரவு பண்ணவில்லை’’ அம்மாவின் முகம் வாடிப் போய்விட்டது.

கொஞ்ச நேரம் தனியாக இருக்கலாமே என்று மாடிக்குப் போனேன். தினமும் ஒரு சண்டையை நான் ஏன் இழுத்துக் கொண்டு வருகிறேன். அதுவும் அம்மாவிடம் மட்டும்.

லீவில் கொஞ்சநாள் அனு சித்தி வீட்டிற்குப் போய்விட்டு வந்தேன். அங்கே மட்டும் மிக சாதுவாக நடந்து கொண்டேன். பொறுப்பாக இருந்தேன். சித்தியும் சித்தப்பாவும் சொன்னதை எல்லாம் கேட்டேன்.

ஈ மெயிலில் பிஸியாக இருந்தேனா எல்லாம் மறந்தே போனது.

டி.வி. ஓடிக்கொண்டிருந்த்து. அப்பா மட்டும் பார்த்துக் கொண்டிருந்தார். அம்மாவிற்கு மிகவும் பிடித்த நிகழ்ச்சியாயிற்றே ஏன் பார்க்கவில்லை. வருத்தமா? ஏதாவது பேச்சுக் கொடுக்க வேண்டும் அவளிடம். ‘‘அம்மா நான் நாளைக்கு போறதுக்கு எல்லாம் ரெடி பண்ணிட்டியாம்மா?’’

‘‘ம்…’’

அவள் முகம் கழுவிவிட்டு படுக்கைக்குப் போய் விட்டாள். என்னால் தாங்கவே முடியவில்லை. முன் ஹாலுக்கு வந்தேன்.

‘‘அப்பா…’’ திரும்பினார் அப்பா.

‘‘அம்மாவிற்கு என்மேல் கோபமா? ஸாரிப்பா. அம்மா அடிக்கடி அதைப்படி இதைப்படிங்கறதும் எரிச்சலா இருந்த்து. நல்லதுக்குத்தான் சொல்றாங்க. ஆனா என் இஷ்டப்படியும் கொஞ்சம் விட்டிருக்கலாம். சரி. அதுக்காக என்மேலே கோபப்பட்டு ஒதுங்கணுமா? அவங்க பிள்ளையைக் கண்டிக்க உரிமை இல்லையா அவங்களுக்கு? நான் சரியாய் செய்துட்டா ஏன் சொல்லப்போறாங்க. எனக்கு என் தப்பு தெரியுதுப்பா. ஆனா…’’

‘‘உன் டீன் ஏஜை என்றோ புரிந்து கொண்டோம் பிரியன்.’’

‘‘பின்னே ஏம்பா அம்மா உம்முனு…?’’

‘‘கிட்டே வா பிரியன்’’ மெதுவாக சொன்னார் அப்பா. தூங்கிவிட்ட அம்மாவின் அருகில் உட்கார்ந்து அவளின் பாதங்களை வருடினேன். க்ராக் தடவிய பாதங்களின் விரிசல் அவள் மன வேதனையின் பிளவுகளாகப் பட்டன.

**வெ**ளியூரில் வைத்து நடந்த அரை இறுதிப் போட்டியில் எங்கள் பள்ளி அணி தோல்வியைத் தழுவி இருந்த்து. என் நண்பர்கள் எல்லாம் சோகத்தில் இருந்தார்கள்.

“எனக்கு ஊருக்குப் போகவே பிடிக்கவில்லை. உன் வீட்டிலும் பீல் பண்ணுவார்கள் இல்லையா பிரியன்” பிரேம் கேட்டான்.

“இல்லை பிரேம். என் அம்மாவிற்கு நான் நல்ல விளையாட்டு வீரன் என்பதைவிட நேர்மையான விளையாட்டு வீரன் என்பதில்தான் பெருமை அதிகம். சின்னவர்களாக இருக்கும்போதே நம்மிடம் நேர்மை நிறைந்துவிட்டால் நாட்டிற்கு நேர்மையான வக்கீல்கள், நேர்மையான டாக்டர்கள், நேர்மையான அரசியல்வாதிகள், நேர்மையான வியாபாரிகள், நேர்மையான விளையாட்டு வீரர்கள் கிடைப்பார்கள் என்று சொல்லிக் கொண்டே இருப்பார்கள்.”

அம்மாவிற்கு கிரிக்கெட் உயிருன்னா – நேர்மை அதற்கும் மேல். என்னை கிரிக்கெட் ப்ளேயராக்கிப் பார்க்க வேண்டும் என்று ஆசைப்பட்டதே அவங்க தான். ஆனா கிரிக்கெட் வீரர்கள் சிலர் மட்டமாகிப் போனதை அவங்களாலே தாங்கிக் கொள்ளவே முடியவில்லை. எல்லோரோட மனசுக்கும் உற்சாகம் தரும் விளையாட்டைக்கூட பேரம் பேசி தாய் நாட்டை தலைகுனிய வச்சுட்டாங்களேன்னு டி.வி. பார்த்துட்டு இருந்தவங்க அந்தச் செய்தி வந்ததும் ரொம்ப அழுதுட்டாங்கன்னு அப்பா சொன்னார். நான் தரும் கஷ்டங்க்கூட அதுக்கு முன்னாடி பெரிசாத் தோணல்லை அம்மாவுக்கு. பாதை தவறினாத்தான் பாய்ஞ்சுடுவாங்க. நேத்து இரவு எல்லாம் அம்மா ஒரே அப்செட். நான்கூட பயந்துட்டேன். “சரி… சரி… நீ கவலைப்படாதே. நாம் நேர்மையாத்தானே விளையாண்டோம். அதற்காக ரொம்ப சந்தோஷப்படு.”

வீட்டிற்கு வந்ததும் அம்மாவைத் தேடினேன்.

“அம்மா… இன்னிக்கு மேட்சுல நாங்க தோத்துட்டோம்மா… ஆனால்….”

“நீ… நேர்மையானவன், பிரியன்” அம்மா அவன் தலையில் முத்தமிட்டாள்.

# கவரிமான்கள்

**இ**ன்று இரவு விருந்து ஏ.பி.ஸி. பங்களாவிலிருந்தாம். பள்ளியில் இருந்து ஆசிரமத்திற்கு வந்தவுடன் அறிவித்தார்கள். அங்கிருந்த குழந்தைகளுக்கு ஒரே சந்தோஷம்.

ஏ.பி.சின்னச்சாமி ஐயாவைத் தெரியாதவர்கள் இருக்க முடியாது – அந்த வட்டாரத்தில். மில், ஜின்னிங் பாக்டரி, பஸ் நிறுவனம் என்று பலவற்றிற்கும் சொந்தக்காரர். புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள ஏபிஸி இன்ஜினியரிங் கல்லூரியும் அவர்களுடையதுதான்.

பாலமுருகன் கோயில் அவ்வூரில் பிரபலம். திருவிழாக்கள் பூஜைகள் எல்லாம் அமர்க்களமாக நடக்கும். கோயில் தேவஸ்தானமே, 'அன்பு ஆஸ்ரமம்' என்ற ஆதரவற்ற குழந்தைகள் விடுதியை நடத்தி வந்தது. முப்பது குழந்தைகளுக்கு உணவும் இருப்பிடமும் கொடுத்து பள்ளிக்கும் அனுப்பி வைத்தது.

தீபாவளி, பொங்கல் போன்ற நாள்களில் ஆசிரமத்தின் தினசரி உணவுடன் நல்ல விருந்தும் கிடைக்கும். அவ்வப்போது ஏபிஸி பங்களாவில் இருந்தும் அனுப்பி வைப்பார்கள். சாதாரணமாக விதவித உணவுகள் ஆசிரமத்தில் கிடைக்காது. பள்ளியில் சக மாணவர்கள் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருப்பார்கள் ஆசிரமக்குழந்தைகள்.

''இன்னிக்குக் குடும்பத்தோட ஹோட்டலுக்குப் போறோம். நூடுல்ஸை ஒரு பிடி பிடிப்போம்.''

''மஷ்ரூம் கட்லெட் கீதா ஹோட்டலில் எவ்வளவு நன்றாக இருக்கும் தெரியுமா?''

''எனக்கு குலோப்ஜாமுனோட ஐஸ்கிரீம் சேர்த்து சாப்பிடுவது ரொம்பப் பிடிக்கும்.''

ஆசிரம மாணவர்களுக்கு ஏக்கத்திலேயும் கற்பனையிலுமே வயிறு நிரம்பிப் போகும். பெற்றோர்களை எண்ணி மனம் வாடிப் போகும். பெற்றோர்கள் இல்லாதவர்கள்தானே ஆஸ்ரம மாணவர்கள் எல்லாம். தூரத்து உறவினர்கள் எப்போதா வந்து கொஞ்சம் பலகாரம் தந்துவிட்டுப் போகும்போது கையில் தரும் ஐந்தோ பத்தோ ரூபாய்களைப் பத்திரப்படுத்தினால்தான் பென்ஸிலோ பேனாவோ தொலைந்தால் வாங்கிக் கொள்ளலாம். கோயில் திருவிழா அன்று ஏதாவது பொருளோ இனிப்போ வாங்கிக் கொள்ளலாம்.

ஏபிஸி முதலாளி ரொம்ப வருஷங்கள் வெளிநாட்டில் இருந்தவராம். பிறகுதான் சொந்த ஊருக்கு வந்து தொழில்கள் எல்லாம் ஆரம்பித்தாராம். இன்ஜினியரிங் காலேஜ் வந்ததும் இங்கேயே அதிகம் இருக்க ஆரம்பித்தாராம்.

அவர் ஊருக்கு வந்ததில் இருந்து அன்பு ஆசிரமக் குழந்தைகளுக்குக் கொண்டாட்டம்தான். அவ்வப்போது பங்களாவில் இருந்து இவர்களுக்கு உணவு வரும். சாதாரண உணவுதான் என்றாலும் நல்ல நல்ல வகைகள் இருக்கும்.

இவர்களும் மற்ற மாணவர்களுடன் பெருமையாக சொல்லிக் கொள்ள ஆரம்பித்துவிட்டார்கள் – அது சாப்பிட்டோம் இது சாப்பிட்டோம் என்று. ஏபிஸி ஐயாவை எண்ணி நன்றியில் நெகிழ்ந்து போவார்கள்.

''ஐயாவுக்கு இன்னிக்காவது நமது நன்றியைத் தெரிவிச்சாகணும்'' என்றான் சீனு.

“ஆமா. ரொம்ப நாளா நெனைக்கிறோம்… முடியல்லையே… ஆஸ்ரமத்துக்கு வருவாங்கன்னாங்க… வரலியே இன்னமும்?” – இது ரகு.

“பெரிய முதலாளி இல்லையா… எத்தனை வேலைங்களோ… போனவாரம்கூட அமெரிக்கா போயிட்டு வந்தாராம்…”

“பரிசுப் பொருளா ஏதாச்சும் வாங்கி அனுப்பலாமா?” சமாதானப்படுத்திச் சொன்னான் சோமு.

“வேண்டாம் வேண்டாம். அவங்ககிட்ட எக்கச்சக்கம் இருக்கும்” தடுத்தான் ரத்தினம்.

“நம்ப முருகேசன் நல்லா வரைவான். நல்ல படமா வரையட்டும். நாமெல்லாம் சேர்ந்து நன்றி சொல்லி வார்த்தைகள்ல் எழுதலாம்” குழந்தைகள் பேசிப்பேசி ஒரு முடிவுக்கு வந்தார்கள்.

பார்த்துப் பார்த்து முருகேசன் அழகாய் வரைந்தான். நண்பர்கள் யோசனைகள் சொன்னார்கள்.

வண்ண வண்ண மலர்கள். அவற்றில் நன்றி எனும் பனித்துளிகள் கசிவதாய் கச்சிதமாக வந்த்து ஓவியம்.

ஆளுக்கு கொஞ்சம் பணம் போட்டு உயர்ந்த பிரேமும் போட்டாகிவிட்டது.

மாலை இறைவணக்கம் முடிந்தது. குழந்தைகள் வேகமாக வீட்டுப்பாடங்களை முடித்தார்கள். ஏபிஸி பங்களா வேனுக்காகக் காத்திருந்தார்கள். உணவு வரும் வேனில் இப்படத்தையும் அனுப்பிவிட முடிவு செய்தார்கள்.

ஏபிஸி வேன் வந்தது. வழக்கம்போல ஐயாவின் சமையற்காரர்கள் உணவுகளைக் கொண்டு வந்தார்கள். புதுப்புது வகைகளின் வாசம் பசியை அதிகம் கிளப்பிவிட்டது.

“பசங்களா, நல்லா சாப்பிடுங்க. இன்னிக்கு நெறய மாம்பழங்களும் கொண்டாந்திருக்கோம்.” பணியாளர்கள் கூற சிறுவர்கள் முகத்தில் பிரகாசம். குண்டு குண்டான மாம்பழங்களுடன் உணவுகள் பரிமாறப்பட்டன.

குழந்தைகள் நாலுபேர் உள்ளே போனார்கள். பெரிய பிரேம் போட்ட படத்தை ஆவலாய் எடுத்து வந்தார்கள்.

“அண்ணாச்சி, இதை ஐயாகிட்ட நாங்க நன்றியோட தந்ததா கொடுத்துடுவீங்களா?” ஆவலுடன் கேட்டார்கள்.

“நீங்க வரஞ்ச படமா? இதை எங்க முதலாளி மாட்டப்போறாரு. பங்களாவுல எல்லாம் வெளிநாட்டு படங்கதான். அதுவும் அளவாத்தான் இருக்கும். அவருக்கு பங்களா சுத்தமா இருக்கனும். கசகசன்னு இருந்தா புடிக்காது. உடனே காலி பண்ணிடனும்பார். உங்களுக்கு சாப்பாடு வர்றதும் அப்படித்தான்னு நெனக்கிறோம். அப்பப்ப பங்களாவுல பெரிய விருந்து நடக்கும். அப்ப சாப்பாடு நெறய மிஞ்சும். “இதெயல்லாம் ஆசிரமத்துக்குக் கொடுத்துட்டு வீட்டை சுத்தமாக்கும்பார். நாங்களும் கொண்டு வர்றோம்.” சமையற்காரர்களின் பேச்சு குழந்தைகளை குறுகிப் போக வைத்தது. சட்டென்று எழுந்தார்கள். பண்பு மாறாமல் பேசினார்கள்.

“இத்தனை நாள் சாப்பாடு தந்ததுக்கு நன்றி அண்ணாச்சி. ஐயாவுக்கு ரொம்ப நன்றி சொல்லுங்க. இனிமே எங்களுக்கு எதுவும் வேண்டாம். இப்பவும் யாருக்கும் பசியில்லை. தயவுசெய்து எல்லாத்தையும் கொண்டு போயிடுங்க” தீர்மானமாய் சொன்னார்கள். சமையற்காரர்களுடன் வார்டனும் திகைத்தார்.

ஏபிஸி பங்களாவிற்கு மீண்டும் உணவுகள் திரும்பி வந்தன. ஒரே பரபரப்பாகிவிட்டது அங்கு.

கொஞ்ச நேரத்தில் இரு வேன்களில் ஏபிஸி பங்களா முதலாளி வீட்டிற்குக் குழந்தைகள் வரவழைக்கப்பட்டனர். அங்கு அவர்கள் வரைந்த ஓவியம் நடுநாயகமாக மாட்டப்பட்டிருந்த்து. ஏபிஸி முதலாளி உருக்கமாகப் பேசி வேலைக்காரர்களின் பேச்சுகளுக்கு மன்னிப்பு கேட்டார். தன்னை அவர்கள் தவறாகப் புரிந்துகொண்டு விட்டனர் என்றும் கூறினார்.

தனக்கு சுத்தம் பிடிக்கும்தான். ஆனால் மாணவர்கள் விஷயத்தில் தான் அப்படி நடந்து கொள்ளவில்லை என்றும் கூறினார். விருந்து நடக்கும் போதெல்லாம் அவர்களுக்கும் சேர்த்தே உணவுகள் வாங்கப்படுவதாகவும் குறிப்பிட்டார். அவரின் நல்ல மனம் குழந்தைகளுக்கு ஆறுதலைத் தந்தது. ஆனாலும் அங்கிருந்து இனி உணவு அனுப்பப்பட வேண்டாம் என்று வேண்டிக் கேட்டுக்கொண்டனர். அப்போது அளித்த இனிப்புகளைக் கூட ஏற்றுக்கொள்ளவில்லை.

ஐயாவின் அன்பு மட்டுமே போதும் என்று விடைபெற்று வந்துவிட்டார்கள்.

முதலாளி வருத்தமும் வேதனையுமாக... தன் ஆட்களை கோபித்துக் கொண்டார்.

“தப்புப் பண்ணிட்டீங்களேய்யா. பிஞ்சுங்க மனம் வாடிருச்சே... மாணவங்க மனசு உறுதி. வைராக்யம் நெறஞ்சது. அவங்க இப்ப குழந்தைங்க இல்லை... கவரிமான்கள்.”

❍❍❍

# படிக்கும் இயந்திரங்கள்

**மா**மா, அத்தை, நாணா, நான் எல்லோரும் நாணாவுக்கு இன்ஜினியரிங் காலேஜ்ல இண்டர்வியூன்னு இங்கே வந்தோம். இது ரொம்ப பெரிய காலேஜ்.

புட்பால் வெளயாட, டென்னிஸ் வெளயாட எல்லாம் இடம் இருக்கு. நாணா இங்கே படிச்சா எனக்கு ரொம்ப சந்தோஷம் – அடிக்கடி வரலாம். காலேஜ் பக்கத்துலய குற்றாலம் மாதிரி அருவியெல்லாம் கூட இருக்கு.

நாணா எங்க அத்தை பையன். என்னைவிட ரொம்பப் பெரியவன். எனக்கு ரொம்பப் பிடிக்கும். நான் எப்பவும் அத்தை வீட்லதான் அடிக்கடி இருப்பேன். ஆசை ஆசையா வச்சுக்குவாங்க. ஆனா நாணாவுக்குத்தான் எப்பவும் திட்டு. படிக்கிறது போதாதாம்.

நாராயணனை நாணான்னு கூப்பிடுவோம். அவன் நல்லாத்தான் படிப்பான். பர்ஸ்ட்டா வர்றதில்லையாம். என்ன செய்ய... முடியறதைத்தானே படிக்க முடியும்? முன்னே எல்லாம் நெறய்ய கதை சொல்வான். கம்ப்யூட்டர்லே என்னோட கேம்ஸ் வெளயாடுவான். இந்த வருஷம் பிளஸ் டூ படிக்கிறான். நெறய டியூஷன்கள் வச்சி மாத்தி மாத்தி போயிடுவான். பாக்கவே முடியாது அவனை. எனக்கு அழுகையா வரும். ஆனா என் பிறந்த நாளை மறக்காம ஞாபகம் வச்சிருந்தான். எனக்குப் பிடிச்ச சாக்லேட்டைக் கொண்டு வந்தான்.

“கண்ணா, இன்னும் கொஞ்ச வருஷத்துல ஐயா இன்ஜினியர் ஆயிடுவேன். உனக்காக என்னவெல்லாம் செய்றேன் பார்.”

அப்போது மாமா வந்துட்டார். “பேசறதெல்லாம் நல்லாத்தான் இருக்கு. செயல்ல காட்டு... மொதல்ல உட்கார்ந்து படி... போ” விரட்டி விட்டார்.

ப்ளஸ் டு பரீட்சைக்கு ரெண்டு மாசம்தான் இருக்காம். ரிவிசன்லே மார்க்கு கொறஞ்சுடுச்சாம்.

முன்னே எல்லாம் மாமா நாணாவை நல்லாத்தான் வச்சுக்குவார். அவன் பெரிய வகுப்புக்கு வரவர அவன்கிட்டே சிடுசிடுன்னு இருக்கார்.

“உனக்குத் தெரியாதுடா. அவன் நல்லா படிச்சாத்தான் நல்ல உத்யோகத்துக்குப் போகமுடியும். மார்க் நெறய வேணுமில்ல.”

என்ட்ரன்ஸ் டெஸ்டுக்கு ஹால் டிக்கட் வாங்க வரிசையிலே காத்திருந்தோம். அம்மாடியோ எத்தனை பேர். அத்தனை அம்மா அப்பாவும் மாமா மாதிரியே திட்டுவாங்களோ?

பப்ளிக் பரீட்சைக்கு தனி ரூமிலே போட்டாச்சு நாணாவை. கீழே எங்கே வந்தான். மாமாவே கொண்டு போய் மாடியிலே சாப்பாடு கொடுத்தார். அத்தை வீட்டை விட்டு வெளியே வரவே இல்லை. நாணா சின்னதா தும்மினாக்கூட மாமா திட்ட ஆரம்பிச்சிடுவார்.

“அதான் அப்பவே சொன்னேன். பரீட்சை இருக்கு. உடம்பைப் பத்திரமா பாத்துக்க வேணாம்? அதுல அக்கறை இருந்தாத்தானே?”

பாவம்! அவன் தும்மக்கூட பயந்தான்.

கணக்குல அவன் சுமார்தான். டியூசன் வச்சாலும் சரியாகவில்லை. “கண்ணா சுவாமிட்டே எனக்காக வேண்டிக்கோடான்னு” கணக்கு பரீட்சை அன்னிக்கு கேட்டான். பாவமா இருந்துச்சு. ரிஸல்ட் வர்ற அன்னிக்கெல்லாம் பதறி... பதறி... வீட்ல எல்லோருக்கும் ஒண்ணும் ஓடல்ல.

அப்பாடா! நாணா நல்லபடியா பாசாயிட்டான். அதுக்குப் பெறகும் அவனுக்கு எங்கே நிம்மதி. இன்ஜினியரிங் காலேஜ்ஜுன்னா என்ட்ரஸுக்குப் படிக்கணுமே?

நாணாவுக்கு வெளியூர்ல தன் பிரெண்ட்ஸ்ஸோட எக்ஸெல், ஐ.ஐ.பி.இன்னு கோச்சிங் தர்ற இடங்க இருக்காம் அங்கே போகணும்னு ஆசை.

“பிரண்ட்ஸ்ஸோட போயி... அரட்டைதான் அடிப்பே. சும்மா தனி டியூஷன் வைக்கிறேன்னு” புரோபசர்களை வரவழைச்சு டியூஷனுக்கு ஏற்பாடு செய்தார் மாமா. அப்போ பிளஸ்டூவைவிட கெடுபிடி.

என்ட்ரன்ஸ் சுமாராத்தான் பண்ணினான் நாணா.

கட்ஆப் மார்க் கம்மியாம். பேக்பேர்டுன்னா சுலபமா சீட் கிடைக்குமாம்.

சாதி வேணுங்கறாங்களா வேண்டாங்கறாங்களா? எனக்குப் புரியல்லே ஒண்ணும்.

கவுன்சலிங் நடந்துட்டிருந்தது. மாமா ரொம்பவும் டென்ஷனாயிட்டார். நாணாவின் பிரெண்ட்ஸ் யாரு கவுன்சிலிங்கிற்குப் போய்ட்டு வந்தாலும் அந்த காலேஜ் பத்தி அது இது என்று கேட்டுக்கொண்டே இருப்பார்.

“நல்ல மார்க் வாங்கினா முதல்யே ப்ரீ சீட்லே நல்ல காலேஜ் கிடைக்கும். சொன்னா புரிஞ்சாத்தானே? அவனைப் பார் இவனைப் பார்” ஆரம்பிச்சிடுவார். பாவம் நாணாவுக்கு முகம் சுருங்கிப் போயிடும். நாணாவுக்கு கவுன்சிலிங் எப்போ?

மாமாவுக்கு நெறய பிரெண்ட்ஸ். மேனேஜ்மெண்ட் கோர்ஸ் பரீட்சை எழுதினான் நாணா. பலம்மா சிபாரிசு வேற பண்ணி இருக்காம். இந்த காலேஜுல சீட் கொடுத்துடுவாங்கன்னு சொன்னாங்க. தெனமும் யார் யாரையோ பாத்துட்டு வந்தார். இங்கேயும் இன்டர்வியூல என்ன பேசணும்னு நாணாவை தயார் பண்ணினாங்க.

இந்த காலேஜுல இன்டர்வியூக்குத்தான் மாமா, நான், நாணா, அத்தை எல்லாம் வந்தோம். நானும் அத்தையும் காருக்குப் பக்கத்துல இருந்தோம். அவங்க அப்பாகூட நாணா உள்ளே போயிட்டான். அத்தை பக்கத்துல சின்ன பிள்ளையார் கோயிலைப் பார்த்ததுமே அங்கே போயிட்டாங்க.

காலேஜ்ல ஏகப்பட்ட மரங்க குளுகுளுன்னு. பக்கத்துல மலை இருக்கறதாலே நெறய கொரங்குங்க. அதைப் பார்க்கவே குஷியா இருக்கு. அதுவும் குட்டிக் கொரங்குங்க பார்க்கப் பார்க்க அழகுதான். ஏதாச்சும் தருவோம்னு சுத்தி சுத்தி வருது. அதோட அம்மா எல்லாம் அதை சந்தோஷமாக வச்சுக்குது. குட்டி செய்றதை அம்மா அப்பா கொரங்குங்க பாத்துட்டு இருக்கு. நல்லா வெளயாட விடுது. சாப்பிட தருது. குட்டிகளுக்கு ஜாலிதான்.

ஹும்... அதோட அப்பா, அம்மா எல்லாம் படிபடின்னு சொல்லாது. மார்க்கு எவ்வளவுன்னு கேக்காது. ஆமா... இது மிருகம்தான். ஆதி மனுசன்னும் சொல்வாங்களே? மோஸ்ட் பேக்வேர்டா? அப்ப கட் ஆப் மார்க் ரொம்ப கம்மியா இருக்குமே...? நெனச்சுட்டே இருந்தேன்.

இதோ மாமா வேகமா சந்தோஷமா வர்றார். பின்னால் வர்றான் நாணா.

“டேய் கண்ணா! நம்ம நாணாவுக்கு இந்த காலேஜ்லே இடம் கெடச்சுடும். இன்னிக்கு உங்களுக்கு ஐஸ்கிரீம், ஸ்வீட் எல்லாம் உண்டு.”

எனக்கு ஒரே சந்தோஷம். நாணா பக்கம் ஓடினேன். அவன் சந்தோஷமாகவே இல்லை. அதான் படிச்சு இன்ஜினியர் ஆயிடுவானே பெறகு என்ன?

செல்போன்லே மாமா யார் யாருக்கோ நன்றி சொல்லிக் கொண்டிருந்தார். அத்தை பிள்ளையாருக்கு வெடல போடப் போனாங்க.

உற்சாகமே இல்லாம நாணா கார்லே உட்கார்ந்தான். நானும் அவன்கூட உட்கார்ந்து கையைப் பிடிச்சேன்.

“நாணா உனக்கு இந்த காலேஜ் பிடிக்கலையா? நீ சந்தோஷமாவே இல்லையே...”

“அதெல்லாம் ஒண்ணுமில்லே கண்ணா. இவங்கெல்லாம் எப்பப் பார்த்தாலும் மார்க்கு, மார்க்குன்னு தானே கேட்டாங்க. இத்தனை வருஷமா ஸ்கூல்ல மரியாதையா, ஒழுங்கா, காப்பி ஏதும் அடிக்காம, வீட்லேயும் நல்லவனாத்தானே இருந்தேன். அதை யாராவது பாராட்டினாங்களா? படிக்கிற இயந்திரமாத்தானே பார்த்தாங்க. படிப்பு இருக்கட்டும் பண்பாடு உன்கிட்டே இருக்குன்னு தட்டிக் கொடுத்தாங்களா?

இப்பவும் காலேஜ்... காலேஜ்தான். படிப்போட நல்லவனா, நேர்மையானவனா இருக்கணும்னு யாராவது சொன்னாங்களா? நீ யோசிச்சா புரியும். இன்ஜினியர் ஆனா மட்டும் பத்தாது – நல்ல இந்தியனாவும் ஆகணும்டா”

எனக்கு அழுகை, வேகம், பயம் எல்லாம் வந்தது. எங்க அம்மா அப்பா பெரியவனானதும் என்னை எப்படிப் பார்ப்பாங்க?

❍❍❍

# அக்கினிக் குஞ்சொன்று கண்டேன்

**நா**ன் இன்னிக்கு ரொம்ப சந்தோஷமா இருக்கேன். இப்படி ஒரு நல்ல செய்தி இன்னிக்கு வருமுன்னு எதிர்பார்க்கலை. இத வச்சி ஊர் பெரியவங்க்கிட்ட பேசலாமே.

அது வேறொண்ணுமில்ல. எங்க பகுதி புள்ளைங்களுக்கெல்லாம் காந்தி ஜெயந்தி வருதுன்னு கட்டுரைப் போட்டி வச்சிருந்தாங்க. நெறயப் பேர் கலந்துகிட்டோம். அதுல எனக்கு மொதப் பரிசுன்னு சொல்லி இருக்காங்களாம். பொன்னுத்தாத்தா வந்து சொல்லிட்டுப் போனாரு.

பொன்னுத்தாத்தா மத்தவங்களுக்கு எப்படியோ எனக்கு ரொம்பப் பிடிக்கும். எனக்கு காந்தித் தாத்தாவையும் அவரு இருக்குற பொன்விழா மைதானத்தையும் புடிக்கும். அதனாலேயே அங்கே வாட்ச்மேனா இருக்கிற பொன்னுத்தாத்தாவையும் புடிச்சுடிச்சோ? மைதானத்து மேல எனக்கிருக்கிற அக்கறையைப் பார்த்துத்தான் அவர் எம்மேலே பிரியம் காட்றாருன்னு புரிஞ்சுது.

பொன்விழா மைதானம்... ராஜபாளையத்துல மொடங்கியாத்துக்குப் போற வழில இருக்கு. பெரிய கடைத்தெரு, ரிஜிஸ்தர் ஆபிஸ் தெரு, முடங்கியார் தெரு மூணும் கலந்து முக்குலே பேசற மாதிரி தெரியும் அங்கே. மைதானத்தைச் சுத்தித்தான் கடைங்க, ஆபிஸ், வீடு – எல்லாம்.

பெரிய மைதானம். காங்கிரஸ் பொன்விழா ஞாபகார்த்தமா கட்டினதாம். டாக்டர் ராஜேந்திர பிரசாத் திறந்து வச்சதாம். கிரவுண்டுல கறுப்புக் கல்லுல ரொம்ப அழகான காந்தி சிலை. பாக்கறப்பவெல்லாம் கும்புடத் தோணும். எங்க வீட்லேருந்து பார்த்தாலே காந்தித் தாத்தாவை நல்லாத் தெரியும். பள்ளிக்கூடம் போறப்ப வர்றப்ப, ஊருக்கு, கோயிலுக்கு எங்க போனாலும் இங்கிருந்தே அவரைப் பார்த்து சொல்லிட்டுத்தான் போவேன்.

காந்தித் தாத்தாவைப் பத்தி வாத்தியார் கதை சொல்லும் போதும், புஸ்தகம் படிக்கிற போதும், டி.வி. பார்க்கிற போதும் மைதானத்து காந்தி சிலை ஞாபகத்துக்கு வரும். வீட்ல இருந்தாலும் பொய் சொல்றது தப்பு, பெரியவங்களை வய்யிறது தப்புன்னு அவர் ஞாபகப்படுத்திக்கிட்டே இருப்பாரா... தப்பு செய்ய பயமாவே இருக்கும். அவரோட சத்தியமும், அஹிம்சையும் ரொம்பப் புடிக்கும். அவங்க வாத்தியாரு காப்பியடிக்கச் சொன்னாலும் பள்ளிக்கூடத்துல காப்பியடிக்காம இருந்தது ரொம்ப ரொம்ப புடிக்கும். தினமும் அவரு சிலை பக்கத்துல போய் தடவிப் பார்த்துட்டு தொட்டுக் கும்பிட ஆசையா இருக்கும். ஆனா மைதானம்தான் பூட்டி இருக்குமே.

எங்க ஊர் தேசபக்தியைப் பத்திக் கேள்விப்பட்டு பெருமையா இருக்கும். அரங்கசாமி ராஜா, குமாரசாமி ராஜான்னு பெரிய பெரிய தேசத் தலைவர்களெல்லாம் இருந்தாங்களாம். அவங்களாலேதான் காந்தித் தாத்தா இந்த இடத்துக்கு வந்தாராம்.

காந்தி சிலைக்கு கீழே "காந்தியடிகளின் ராஜபாளையம் விஜயம் முதன்முறை 5-10-1927 –ன்னு போட்டிருக்கும். ரெண்டாம் முறை 25-1-193... கடைசி நம்பர் இருக்காது." யார்கிட்டேயாவது கேக்கணும். நல்லா எழுதச் சொல்லணும்.

நாட்டுக்காகத் தியாகம் செஞ்ச பெரியவங்கள நெனச்சா கண்ணுல தண்ணி வரும். நம்மளும் பெரிசா ஏதாவது பண்ண்ணும்னு தோணும்.

குமாரசாமி ராஜா தன் வீட்டையே நாட்டுக்காகக் கொடுத்துட்டாராம். கலைமன்றமாக்கினாராம். அவராலதான் பொன்விழா மைதானமே உருவாச்சாம். பக்கத்துல இருக்கிற பண்ணையார் ஆர்ச் கட்டடமும் சுதந்திரம் வாங்கினதை ஞாபகப்படுத்தி கட்டினதுதானாம். பஞ்சாபிலே ஜாலியன் வாலாபாக் மாதிரியாம் பொன்விழா மைதான கட்டிடம்.

எங்க தாத்தா சுதந்திரப் போராட்டம் பத்தி கதை கதையா சொல்வாரு. கிழக்கே சஞ்சீவிமலை தெரியுதுல்ல... அங்கே உச்சியில பெரிய பாறையில தேசியக் கொடிய பறக்கவிட்டாங்களாம். தினமும் அந்த மலையைப் பாத்தும் கும்புடுவேன். எங்க ஊருக்கு மேற்கே மலையோரமா அய்யனார் அருவியிலிருந்து ஊருக்கு தண்ணி வரும். அதுக்குத் தனியான ருசி இருக்கும். பெரியவங்களோட நல்ல மனசுக்காகத்தான் தண்ணி இனிக்குதுன்னு தோணும். வருஷா வருஷம் சித்திரைத் திருவிழா எங்க ஊர்ல நல்லா நடக்குறதும் சந்தோஷமா இருக்கும். தேச ஒத்துமையை சொல்லித் தந்ததாலேயே என்னவோ இங்க தமிழ் பேசறவங்க தெலுங்கு பேசறவங்க எல்லாம் ஒண்ணா சேர்ந்து தமிழ் வருஷப்பிறப்பைக் கொண்டாடுவாங்க.

ஹூம்... இப்பல்லாம் நாட்டுக்காக உழைக்கிறவங்க யார் இருக்காங்க?ன்னு அப்பா சொல்லிட்டே இருப்பார். “ஏன் நாங்க இல்லையா?” – நான் கேட்டா அம்மா பெருமையாச் சிரிப்பாங்க.

முன்ன எல்லாம் பொன்விழா மைதானத்துல நல்ல நல்ல கூட்டங்க நடக்குமாம். பல பிரச்சினைங்க வந்ததாலே பூட்டிட்டாங்களாம். அப்பப்ப பள்ளிக்கூட ஆண்டுவிழா நிகழ்ச்சி, பொருட்காட்சின்னு நடக்கும். அப்பல்லாம் மைதானம் தெறந்திருக்கும். சந்தோஷமா இருக்கும். கடைகளைப் பாக்கறதைவிட காந்தியைப் பாக்கத்தான் போவேன். கைல கிடைக்கிற காசுக்கு கொஞ்சம் பூ வாங்கி வைப்பேன்.

மைதானத்து வாட்ச்மேன் பொன்னுத்தாத்தா ரொம்ப கண்டிப்பு. சுத்தி சுத்தி வருவார். சுவத்து மேலே யாராவது ஏறி நின்னா கம்பை எடுத்துட்டே போவார். சில பசங்க அவரு இல்லாத நேரமா உள்ளே குதிச்சிடுவாங்க. இது தப்புன்னு நானும் சொல்வேன். என்னை நல்லா வச்சுக்குவார். காந்தி ஜெயந்தி அன்னிக்கு காந்தி சிலைக்கு பொட்டெல்லாம் வச்சு கும்புட விடுவார்.

எனக்கு இந்த இடத்தைவிட்டு வேறு எங்கவும் போகப் புடிக்காது. வேற இடத்துல பெரிய வீடா பார்த்து போகலாம்னு நெனச்சாலும் எங்களுக்கு மனசே வரவில்லை.

ஆனா எனக்கு ஒரு குறை. இங்க பசங்க நெறயப் பேரு இருக்கோம். விளையாடத்தான் சரியான இடம் இல்லை. மைதானத்துல விளையாட ஆசைப்படுவோம். விடமாட்டாங்க. ஏக்கமா இருக்கும். வாட்ச்மேன் தாத்தாகிட்ட நைஸா கேட்பேன். “தாத்தா, மைதானம் சும்மாதானே இருக்கு. கொஞ்ச நேரம் எங்களை விளையாட விடலாமே?” முன்ன எல்லாம் புகார் வந்துச்சாம். சரியா வரலையாம். “ஊர் பெரியவங்களை இதுபத்தி கேக்க முடிவு செஞ்சேன். வாட்ச்மேன் தாத்தா மேல வருத்தம்கூட எனக்கு.”

“இந்தப் பசங்க பசங்களாவா இருக்காங்க. விளையாட விட்டா வெனைய இழுத்துட்டு வருவாங்க...” தாத்தா சொன்னதும் எனக்குக் கோபமா வந்துச்சு... எங்களை இத்தனை குறைச்சு எடை போட்டுட்டாரே? எவ்வளவு மதிப்பான மைதானம். காவல் தெய்வம் மாதிரி காந்தித் தாத்தா... விட்டுடுவோமா?

இப்ப நல்ல நேரம் வந்திருக்கு. போட்டியில ஜெயிச்சவங்களை கூப்பிட்டாங்க. பரிசு கொடுத்தாங்க. உற்சாகப்படுத்தினாங்க. அப்பத்தான் நான் என் கோரிக்கையை என் கூட்டாளிங்களோட சேர்ந்து சொன்னேன். பெரியவங்க இறங்கி வந்தாங்க.

“நாங்க சொல்ற நேரத்துல மட்டும் ஒழுங்கா அசிங்கப்படுத்தாம விளையாடணும். ஒத்து வரலைன்னா விடமாட்டோம் புரிஞ்சுதா?”

“ஹைய்…” ன்னு எல்லோரும் குதிச்சாங்க.

முள்ளை எல்லாம் செதுக்கி அன்னிக்கு விளையாட அனுமதி கிடைச்சது. வாட்ச்மேன் தாத்தாட்டே சொல்லி பானை நிறைய தண்ணீரும் டம்ளரும் வைக்கச் சொன்னேன். பெரிய கேட்டை மெதுவாகத் திறந்து விட்டார் பொன்னுத் தாத்தா. மறுபடி “ஹேய்…”ன்னு சந்தோஷமா எல்லாப் பசங்களும் உள்ளே போனோம்.

அவங்கவங்க இஷ்டத்துக்கு விளையாட ஆரம்பிச்சாங்க. நான் மட்டும் காந்திகிட்ட நின்னு பாத்துட்டே இருந்தேன். சந்தோஷமா இருந்திச்சி. காந்தி தாத்தாகூட சந்தோஷமா சிரிக்கிற மாதிரி இருந்துச்சு.

வாட்ச்மேன் தாத்தா இதையெல்லாம் பார்க்காம எங்க போனார். அவர்ட்டே சொல்லணும் அழகா அமைதியா எப்படி விளையாடுறாங்கன்னு காட்டணும். பின்னால மைதானத்துல சுவர்ல ஒட்டியிருந்த நோட்டீஸைப் பிச்சுப் போட்டுட்டிருந்த அவரை வேகவேகமா கூட்டிட்டு வந்தேன். அப்படியே நின்னுட்டேன்.

என்னால நம்பவே முடியல்லே. அவமானம், அழுகை, கோபம் எல்லாம் சேர்ந்து வந்துச்சு. காந்தித் தாத்தா தோள்ல கலர் கலரா சட்டைங்க. கிரிக்கெட் வெளையாடறவங்க கல்தூண் மாதிரி என் காந்தித் தாத்தா மேலே சட்டைகளைக் கழட்டிப் போட்டிருந்தாங்க.

சட்டுனு வாட்ச்மேன் தாத்தா கையில இருந்த விசிலைப் புடுங்கி வெறித்தனமா ஊதினேன். அந்த இடமே அதிர்ந்திச்சு. என்னோட சேர்ந்து பொன்விழா மைதானமும் அழுதுருச்சு.

ஆனா இத்தனைக்கும் நடுவே காந்தித் தாத்தாவோட கண்ணுங்க மட்டும் பளிச்சுன்னு நம்பிக்கையா சிரிச்சது. அக்கினிக் குஞ்சுகளாய் சிலபேர் இருப்போமுன்னா?

❍❍❍

# தாய் மண்ணே வணக்கம்

**அ**றிவுமதியின் முகம் மத்தியானத்திலிருந்தே வாடித்தான் இருக்கிறது. ஏன் என்ன காரணம்? முல்லைநாதன் யோசித்துப் யோசித்துப் பார்த்தும் ஒன்றும் புரியவில்லை. எப்போதும் மதி பிரகாசமாகவே தான் இருப்பான். போதுமென்ற மனமும் தெளிந்த ஞானமும் அவனிடம் உள்ளதாக ஆசிரியர்கள் சொல்லும்போதும் கோபம்தான் வரும் முல்லைக்கு.

எப்போது பார்த்தாலும் மதிதானா? எப்படித்தான் முயன்றாலும் அவனுக்கு நிகராக வர முடியவில்லையே. சாதாரண குடும்பத்தில் இருந்து கொண்டு எப்படி சாதிக்க முடிகிறது அவனால்? ஓர் அற்பத்தனமான ஏக்கம் அவனுள் மதி மீது பொறாமையை வளர்த்துவிட்டது.

சென்ற வாரம்தான் புதிதாய் வந்திருந்தார் சரித்திர ஆசிரியை புவனா டீச்சர். மற்றவர்களிடமிருந்து வித்தியாசமாகத் தெரிந்தார். கண்டிப்புடன் இருப்பதுடன் மாணவ மனங்களுடன் நெருங்கியும் இருந்தார். எல்லோரின் திறமைகளைக் கண்டுபிடித்து அவர்களை ஊக்குவிக்கத் தவறுவதில்லை. அவரும்கூட. அறிவுமதியை அதிகம் புகழ்ந்ததாகத் தோன்றியது முல்லைக்கு. எரிச்சலையும் உண்டு பண்ணி இருந்தது அது.

இன்று புவனா டீச்சர் கட்டுரைத் தலைப்பு ஒன்றைக் கொடுத்து எழுதச் சொன்னார். பரிசும் உண்டாம். அவரவர்க்குப் பிடித்தமான இடத்தைப் பற்றி எழுத வேண்டுமாம்.

முல்லை தன் நண்பர்களிடம் கலந்துகொண்டான். நண்பன் அன்பு ஊட்டிக்குப் போய் வந்ததைப் பற்றி எழுதப் போகிறனாம்.

“என் மாமாவுக்குத்தான் ரொம்ப நன்றி சொல்லனும். எவ்வளவு நன்றாக ஊட்டியை சுற்றிக் காட்டினார் தெரியுமா?” அன்புக்கு ஒரே குதூகலம். ஊட்டி ரயிலில் போனதே சுவாரஸ்யமா இருந்தது. தண்டவாளம் மூன்று பகுதிகளாக இருக்கும். மெதுவா இயற்கைக் காட்சிகளைப் பார்த்துட்டே வந்தோம். குட்டியூண்டு ரயில்தான். மாமா பையன், லவ்டேல்ங்கிற இடத்துல இருக்கிற லாரன்ஸ் ஸ்கூல்ல படிக்கிறான். எல்லோரும் ஸ்கூல்ல ஹாஸ்டல்லதான் தங்கிப் படிக்கிறாங்க. பிரிட்டிஷ் காலத்தில் ராணுவ ஆபிஸர் ஆரம்பித்த பெரிய ஸ்கூல். இந்தியாவோட பல பகுதிகள்ல இருந்தும் வந்து படிக்கிறாங்க. வெளி நாட்லே இருந்துகூட வர்றாங்க. படிக்கிறதோட விளையாட்டு, குதிரை சவாரி, படகு சவாரி, காட்டுக்குள்ள முகாம் போடறது எல்லாமே இருக்கு. நம்ம டி.வி.ல ஹார்லிக்ஸ் இன்னும் பல விளம்பரங்கள்ல இந்த ஸ்கூல காட்டறாங்க. அதோட நீலகிரி அழகான மலை. ஆங்கே தேயிலை ரொம்ப பயிரிடுறாங்க. அழகான படகுல லேக்கை சுத்தி வந்தோம். பொட்டானிகல் கார்டன்ல விதவிதமான செடிங்க. விதவிமா பூக்கள். எனக்கு ரொம்பப் பிடிச்ச இடம் தொட்டபெட்டா. தென்னிந்தியாவிலேயே உயரமான சிகரம். போனதுமே பனி நம்மை வந்து சுத்தி கடந்து போற அழகே தனிதான். அங்கே இருந்து பாத்தா நெறய இடங்கள் சின்னதா தெரியுது. குளிர்தான் தாங்க முடியல. ஒரே சிலிர்ப்பா இருந்துச்சு – இவ்வளவு உச்சியில இருக்குறோமேங்கிறது. இதைப் பத்திதான் நான் எழுதப்போறேன்.

“ஓ.கே. ஓ.கே. ரொம்ப நல்லா இருக்கு. நல்லா விரிவா எழுது. உனக்காவது பரிசு கெடைக்கட்டும். எப்பவுமே அறிவுமதிதான் வாங்கனுமா? மெதுவாக மற்றவர்கள் மனத்தையும் மாற்றிக் கொண்டிருந்தான் முல்லைநாதன். பக்கத்திலிருந்த சூர்யாவைப் பிடித்துக் கொண்டான். “சூர்யா, நீ எந்த இடத்தைப் பத்தி எழுதப்போற?”

எனக்கு ரொம்பப் பிடிச்ச இடம் சென்னையில இருக்கிற ‘‘தக்ஷிணசித்ரா’’ங்கற இடம் தான்.

‘‘அது எங்க இருக்கு? அங்க என்ன விசேஷம்?’’

மகாபலிபுரம் போற வழியில எம்.ஜி.எம் பக்கத்துல இருக்கு. நம்ம நாட்டைவிட்டு வெளிநாடு போனவங்க பெரிய நகரங்கள்ல இருக்கறவங்க இவங்களுக்கெல்லாம் நம் பாரம்பர்ய வீடுகளை ஞாபகப்படுத்துற விதமா ரொம்ப அழகா கட்டி இருக்கிறாங்க. விதவிதமான வீடுகள்.

செட்டிநாடு வீடு. வீட்லே பழைய தூண்கள், முற்றம் எல்லாம் இருக்கும். முன்பு உபயோகித்த பாத்திரங்களைக்கூட வச்சிருக்காங்க. வாசல்ல கோலம். நிலையில தோரணம் எல்லாம் பார்க்கலாம்.

இதே மாதிரி குயவர் வீடு, பழைய திருநெல்வேலி அக்ரஹாரம், நெசவாளர் வீடு, தஞ்சாவூர் பாணி வீடு எல்லாத்தையும் பார்வைக்கு வச்சிருக்காங்க.

கேட்கவே நல்லா இருக்கே... வேற என்னவெல்லாம் இருக்கு? ஆவலுடன் கேட்டான் முல்லைநாதன்.

சொன்னா ஆச்சர்யப்படுவே. சின்னகுன்றுமாதிரி வச்சு பழைய அய்யனார் கோயிலையும் வச்சிருக்காங்க. இது மட்டுமா. கேரளா பாணி வீடு, ஆந்திரா, கர்நாடகா பாணி வீடுகள்லாம்கூட இருக்கு. பார்க்கப் பார்க்க ஆசையா இருந்துச்சு. எனக்குக் கலங்காரி ஓவியம் வரைய கத்துக்கொடுத்தாங்க. என் தங்கை கூட கோலம் போட, தோரணம் கட்ட எல்லாம் கத்துகிட்டா.

நிச்சயம் இது எல்லோருக்கும் பிடிக்கும். நல்லா எழுதுடா. சூர்யாவை மிகவும் உற்சாகப்படுத்தினான் முல்லைநாதன்.

‘‘ஆமாம்! நீ என்ன எழுதப்போற முல்லை?’’ நண்பர்கள் கேட்டனர்.

எனக்குப் பிடிச்ச கேரளாவைப் பற்றிதான். கடற்கரை, கோயில்கள் எல்லாம் பற்றி எழுதுவேன். கேரள மன்னர் அரண்மனை எல்லாம் பார்த்ததைப்பற்றி. அங்கு நடந்த மன்னர் வீட்டுக் கல்யாணத்தைப் பற்றி. அவர்கள் எங்கள் குடும்பத்துக்குத் தந்த விருந்துபற்றி எல்லாம் எழுதுவேன்...’’ சொல்லும் போதே அவனின் குரல் பெருமையால் பூரித்துப்போனது.

‘பே‘... என்று கேட்டுக்கொண்டிருந்தார்கள் நண்பர்கள்.

‘‘கொல்லம் அருகில் தீவுமாதிரியான – ‘பாம்லகூன்’ (Palm Lagoon) என்ற கடற்கரை வாசஸ்தலத்தில் தங்கினோம். யாருமே இல்லை எங்களைத் தவிர. மிக சொகுசான தங்கும் அறைகள். மரத்தில் கட்டியிருந்த ஊஞ்சல் வலைகள், வண்ண விளக்குகள். மீன்பிடி பாலங்கள், நீச்சல் குளம் எத்தனை வசதி!

கடல் நீரிலேயே கட்டில் போட்டு படுத்தபடி படகில் போகும் மீனவர்களை ரசித்தபடி, அலைகளின் ஓசையைக் கேட்டபடி இயற்கையோட ஒன்றி இருந்தோம்.’’

நண்பர்கள் கைதட்டினார்கள். ‘‘டீச்சருக்கு ரொம்பப் பிடிக்கும் இயற்கை வர்ணனை எல்லாம் உனக்குத்தான் பரிசு போ.’’

முல்லை மகிழ்ந்து போனான்.

‘‘ஆமாம். மதிகிட்ட கேட்டீங்களா என்ன எழுதறான்னு?’’

“எங்கயாவது சுற்றுலா போனியான்னு கேட்டோம். எங்கயும் போகலைன்னு சொன்னான்.”

அப்போது புரிந்தது முல்லைக்கு ஓ! அதுதான் அறிவுமதிக்கு கவலையா. எங்கேயும் புதிதாக போக முடியவில்லை. கட்டுரையில் பெரிய வெற்றி பெற முடியாது. சும்மா இரேன் இந்த முறை.

போட்டி வகுப்பு. எல்லோரும் தங்கள் கற்பனைத்திறனை ஓடவிட்டு தங்களுக்குப் பிடித்த இடத்தைப்பற்றி வர்ணனையுடன் எழுத ஆரம்பித்தார்கள். முல்லைக்கு ஒரே உற்சாகம்! இயற்கை எழிலைப்பார்த்து பார்த்து வர்ணித்தான். அருகில் வந்த புவனா டீச்சரும் புன்னகையுடன் தட்டிக்கொடுத்தார்.

மறுநாள் டீச்சர் பேப்பர்களைக் கொண்டுவந்தார். எல்லோரையும் பாராட்டினார். இயற்கை வர்ணனை, ஊரின் வர்ணனை என வித்தியாசமான வர்ணனைகளைப் புகழ்ந்து பேசினார்.

“எல்லாவற்றுக்கிடையேயும் என்னைக் கவர்ந்த்து ஒரு வித்தியாசமான கட்டுரை. எழுதியது அறிவுமதி.”

அனைவருக்கும் ஆச்சர்யம்; முல்லைக்கோ ஆத்திரம்.

“விதவிதமான இடங்களை திறம்பட எழுதி இருந்தீர்கள். அறிவுமதியின் கட்டுரை உள்ளத்தைத் தொடும்படி இருந்தது.”

“அறிவுமதி இங்கே வா.”

மதி மெதுவாக முன்னால் வந்தான்.

“உனக்குப் பிடிச்ச இடம் எதுன்னு சொல்லு.”

அறிவுமதி மெதுவாக நிதானமாகச் சொன்னான்.

“என் தாயின் மடி.”

எல்லோரும் நெகிழ்வில் கரைந்தார்கள்.

“தன் தாயின் மடியைப் பற்றி அத்தனை அழகாக எழுதி இருந்தான். நேற்று அவன் தாய்க்கு உடல்நிலை சரியில்லாத வருத்தத்திலும் இருந்து எழுதி விட்டுத்தான் போனான். அவன் கட்டுரையை வாசிக்கிறேன்...”

“தாயின் – மடிக்கு இணையாக எதைச் சொல்ல முடியும்? நான் மகிழ்ச்சியாக இருக்கும்போதும், கஷ்டமாக உணரும் போதும் நான் உட்கார நினைக்கும் சிம்மாசனம். அங்கு பாசம் பாடலாக ஒலிப்பதைக் கேட்க முடியும். தன்னலமற்ற தியாக அணைப்பை உணரமுடியும். மனத்தின் அத்தனை வேதனைகளும் அகன்றுகொள்ள... தாய்மை எனும் புனிதத்தை மட்டுமே தரிசிக்க வைக்கும் தெய்வத்தின் சந்நிதி அது.”

வாசித்துக் கொண்டிருக்கும்போதே இடையில் பலமான கைதட்டல். அது முல்லைநாதனுடையது.

**(அழ.வள்ளியப்பா நினைவு சிறுகதைப் போட்டி)**

❍❍❍

# வீர விளையாட்டு

**வா**சலின் அழைப்புமணி மெல்லிய இசையை வீட்டிற்குள் பரப்பியது. யாரென்று எட்டிப்பார்த்தாள் வெண்ணிலா. பக்கத்து வீட்டுப்பெண் தாமரைதான். தன் துறுதுறுத்த விழிகளுடன் நின்றிருந்தாள்.

“வாம்மா தாமரை. பள்ளிக்கூடம் விட்டு வந்தாச்சா.”

“நான் அப்பவே வந்துட்டேம்மா. உங்ககிட்ட எனக்கு ஒரு உதவி தேவைப்படுது. அதான் கேட்கலாம்னு வந்தேன்” அவசரத்துடனும் எதிர்பார்ப்புடனும் வார்த்தைகள் வெளிவந்தன.

“ஓ! தாராளமாகக் கேட்கலாம். என் பொண்ணு தாமரைக்கு செய்யாமலா?”

“எங்க பள்ளியிலே விளையாட்டுப் போட்டிகள் வருதும்மா. அணிகள் எல்லாம் பிரிச்சிருக்காங்க. நான் யமுனை அணியிலே இருக்கேன். விளையாட்டுப் போட்டி தவிர அவங்கவங்க அணிக்கான அலங்காரப்போட்டியும் வச்சிருக்காங்க. அதுக்குத் தனியா மதிப்பெண்கள் தருவாங்க. நீங்கதான் அலங்கார ஏற்பாடெல்லாம் ரொம்ப நல்லா செய்வீங்களே. எங்க இல்லத்தை அழகுபடுத்தத் துணையா இருக்கணும். யோசனை சொல்லணும்; செய்வீங்களாம்மா...?”

சின்னப் பெண்ணின் ஏக்கம் கலந்த ஆர்வம் வெண்ணிலாவின் கலாரசனையை மேலும் தூண்டிவிட, சம்மதித்துவிட்டாள்.

தாமரைக்கு இனிப்பும், பழச்சாறும் தந்து உட்கார வைத்துவிட்டு தன் அறைக்குள் நுழைந்த வெண்ணிலா யமுனை இல்லத்தினை என்னென்ன கலைப் பொருள்களையெல்லாம் வைத்து அழகுபடுத்தலாம் என்று யோசித்துப் பல படங்கள் கைவினைப் பொருள்கள் எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு வந்து தாமரையுடன் கலந்து பேசி உற்சாகப்படுத்தினாள். அவளும் யமுனை அணியினைச் சேர்ந்த ஒரு குழந்தையாகித்தான் போனாள். தாமரை போனதும் சமையலறைக்குள் நுழைந்தாள்.

“அம்மா! அம்மா!’ பலமாகச் சப்தம் போட்டுக் கூப்பிட்டபடி வேகமாக வந்தான் இளங்கோ.

“வா இளங்கோ. என்ன இவ்வளவு தாமதமாக வர்றே இன்னிக்கு? ரொம்ப களைப்பா தெரியுறே. இனிப்பும் பழச்சாறும் கொண்டு வர்றேன்.”

சாப்பிட்டபடி அம்மாவின் அறைக்குள் நுழைந்த இளங்கோ அங்கு பரப்பப்பட்டிருந்த பொருள்களைக் கண்டு கண்கள் விரித்தான்.

“அட! எல்லாம் உங்க சேகரிப்புகள் தானே அம்மா? இது விஷயமாகத்தான் பேசலாம்னு வந்தேன். நான் பள்ளி விளையாட்டுப் போட்டிக்காக கங்கை அணியிலே இருக்கேம்மா. இதைப் பிறகு சொல்லலாம்னு இருந்துட்டேன்.”

தர்மசங்கடமாகிப் போனது தாய்க்கு. என்ன பையன் இவன்! எப்போதும் ஒரு தாமதம்.

“இப்பத்தான் பக்கத்து வீட்டுப் பொண்ணு தாமரை வந்துட்டுப் போனா. யமுனை அணியிலே இருக்காளாம். என்னோட உதவி வேணும்னு கேட்டா. அதுக்குத்தான் எடுத்து வச்சிட்டிருந்தேன்.”

“ஓ! சரி! சரி!” எழுந்து கொண்டான் இளங்கோ. வெண்ணிலா மிகவும் வேதனைப்பட்டாள். இந்தப் பருவப் பிள்ளைகளை எதிலும் சேர்த்துக் கொள்ள முடிவதில்லை. கூடக் கொஞ்சம் எடுத்துச் சொன்னாலும் பிடிப்பதில்லை. உணர்ச்சிகளை வெளியே காண்பிக்க மாட்டானே இளங்கோ. இவன் சொல்லும் ‘சரி‘ எத்தகையது.

மிகவும் முயன்று தன் தோழியின் மூலமாக ஓவியர்மாறனை உதவிக்கு அழைத்தாள். மகனுக்குத் துணையாய் இருக்குமாறு கேட்டுக் கொண்டாள். தாமரைக்குத் தேவையானதை வைத்துக்கொண்டு இளங்கோவிற்கும் சில கலைப் பொருள்களைத் தந்தனுப்பினாள்.

பின்... வெண்ணிலா, தாமரை, இளங்கோ அனைவரும் தங்கள் வேலையுடன் ஒன்றிவிட்டார்கள். காகிதங்கள் வெட்டுவது வர்ணம் தீட்டுவது என்று தாமரை அடிக்கடி வெண்ணிலாவைக் காண வந்தாள். இளங்கோ தன் நண்பர்களுடன் ஓவியர் மாறனிடம் ஆலோசனைகளைக் கேட்டு கலந்து கொண்டிருந்தான். மாறன் மிகப்பெரிய ஓவியர். அவரின் கைவண்ணத்தில் கங்கை நதியே பள்ளிக்கு வந்துவிடும் போலத் தோன்றியது. கோதாவரி, காவேரி அணியினரும் விடவில்லை. புதுப்புதுப்பொலிவுகள், அணி இல்லங்களில் சேர்ந்தன.

வெண்ணிலாவும் சளைத்தவள் இல்லை. தன் கலாரசனையை முழுமையாகப் பயன்படுத்தத் தவறவில்லை அவள்.

ஆனாலும் தாமரையின் தாய் திலகத்திற்குள் ஒரு குறுகுறுப்பு –

என்னதான் தாமரைக்கு உதவி செய்தாலும் தன் பையனைத்தானே வெண்ணிலா நினைத்துக் கொண்டிருப்பாள் என்று.

வெண்ணிலா கர்மமே கண்ணாக இருந்தாள்.

“யமுனை ஆற்றிலே ஆயர்பாடியின் அன்பு விளையாட்டு. யமுனை அணியிலோ சிறுவர் எங்களின் வீர விளையாட்டு.”

அழகான தலைப்பினை எழுதிவிட்டு அதற்கேற்ற ஓவியம் ஒன்று தன்னிடம் இருந்ததை நினைவுபடுத்தி அதைத் தேடிக் கொண்டிருந்தாள். இரவெல்லாம் தூங்க முடியவில்லை அவளால்.

பள்ளியின் விளையாட்டுப் போட்டிகள் நடந்து கொண்டிருக்க கங்கை, யமுனை, கோதாவரி, காவேரி அணிகளின் இல்ல அரங்கங்களைப் பார்வையிடத் தனி நீதிபதிகள் அங்கு சென்று கொண்டிருந்தனர்.

வெண்ணிலாவும், திலகமும் முதல் நிகழ்ச்சியான அணிவகுப்பு ஆரம்பமான போதே வந்துவிட்டனர். திலகம் திகிலும் பரபரப்புமாகக் காணப்பட்டாள். வெண்ணிலாவிற்குப் பாவமாக இருந்தது. நடன நிகழ்ச்சியில் இருந்த தாமரைக்குக் கிட்டத்தட்ட அதே பரபரப்பு உணர்வு வந்துவிட்டிருந்தது. தூரத்தில் ஓவியர் மாறன் கம்பீரமாக உட்கார்ந்திருந்தார். இளங்கோவை எங்கேயும் காணமுடியவில்லை.

அணிவகுப்பிற்குப் பின் இதோ முடிவுகள் அறிவிக்கப்பட்டு விட்டன. “பள்ளி விளையாட்டுப் போட்டியில் சிறந்த இல்லத்திற்கான பரிசு பெறும் அணி... யமுனை” பலத்த கை தட்டல்கள். திலகத்தின் முகத்தில் பளீரென்று ஒரு பிரகாசம். வெண்ணிலா மனநிம்மதியுடன் கைதட்டினாள்.

தன் தோழிகள் சூழ ஓடி வந்த தாமரை வெண்ணிலாவைக் கட்டிக் கொண்டாள். “ரொம்ப... ரொம்ப... நன்றி அம்மா. நிஜமா, இந்த வெற்றி எல்லாம் இளங்கோ அண்ணாவுக்குத்தான். இன்னிக்கு காலையிலதான்

இந்த பெரிய பட்டு ஓவியத்தை எங்கிட்ட கொண்டுவந்து கொடுத்தார். ஆயர்களுடன் கண்ணன் விளையாடும் இந்த ஓவியம் வெற்றிக்கு ரொம்ப உதவியாய் இருந்தது.''

எங்கிருந்தோ ஓடி வந்தான் இளங்கோ. ''வாழ்த்துக்கள் அம்மா. உங்க அணிக்குத்தானே வெற்றி'' என்று கூறிவிட்டு பக்கத்தில் வந்து கிசுகிசுத்தான்.

இந்த ஓவியத்தைத் தானே தேடிட்டு இருந்தீங்க? என் பீரோவில் இருந்ததை மறந்துட்டீங்க. எங்கிட்டேயும் கேட்க முடியலை. எனக்கும் உங்க உதவி தேவைதான். ஆனா முதலில் உதவி கேட்டவள் தாமரைதானே? எதிலேயும் தர்மத்தைக் கடைப்பிடிக்கணும்னு சொல்வீங்களே? பாடத்தோட, நேரான வழியிலே நடக்க படிக்கிறதுதான் சிறந்த கல்வின்னு சொல்வீங்களில்லையா? அதோட நான் தெனமும் படிக்கிற திருக்குறள்,

**''கற்க கசடறக் கற்பவை கற்றபின்**

**நிற்க அதற்குத் தக''**

அப்படின்னு கத்துக் கொடுத்ததை மறக்க முடியுமா? கேட்டுவிட்டு ஓடிவிட்டான் இளங்கோ.

இன்ப அதிர்ச்சியிலும், பெருமிதத்திலும் வெண்ணிலாவின் கண்களில் நீர் நிறைந்தன. இக்கால வாலிபர்களிடம் விளையாட்டுத்தனத்துடன் விவேகமாய் வள்ளுவமும் நிறைந்திருப்பதை உணர்ந்து கொண்டாள். அவர்கள் உரையாடலைக் கேட்க நேர்ந்த திலகம் தன் கீழான எண்ணங்களுக்கு வெட்கப்பட்டாள். கற்றோர்கள் இப்படித்தான் இருப்பார்கள் என்று வெண்ணிலாவையும் இளங்கோவையும் போற்றிக் கொண்டிருந்தாள்.

❍❍❍

# கற்பனையோ கைவண்ணமோ

இன்று காலை சரித்திர ஆசிரியர், பாரதிநேசனை கண்டித்ததில் வகுப்பு மாணவர்கள் எல்லோருக்குமே வருத்தம் – கோபியையும் அவன் நண்பர்கள் சிலரையும் தவிர.

பாரதி இந்த ஆண்டுதான் ஸ்ரீ சாரதாதேவியார் உயர்நிலைப்பள்ளியில் வந்து சேர்ந்திருந்தான். சுறுசுறுப்பான அவன் படிப்புடன் விளையாட்டிலும் பிரகாசித்தான். பிறரை உற்சாகப்படுத்துவது அவனுக்குப் பிடித்த கலையாக இருந்தது. நகைச்சுவை உணர்வும் எதையும் எதிர்கொள்ளும் திறமையும் அதிகம்.

அவன் பள்ளிக்கு வந்த புதிது. மனோ என்ற மாணவன் வீட்டுக்கணக்கைப் போடவில்லை என்பதற்காக தண்டனை பெற்று ஓரத்தில் தனியாக அவமானத்தால் தலைகுனிந்து நின்றிருந்தான். பாவமாக இருந்தாலும் பலர் கேலியாகப் பார்த்துக் கொண்டிருந்தனர். புது மாணவன் என்றாலும் பாரதி உரிமையுடன் மனோவின் அருகில் வந்தான்.

‘‘மனோ, கணக்கு வகுப்பு முடிஞ்சு சாரும் போயாச்சு. வா, வந்து உட்கார்’’ என்று ஆதரவாக அழைத்தான்.

‘‘அவமானமா இருக்கா. இனிமே கணக்கை சரியா போட்டுடலாம். நீ மட்டும் தனியா நிக்கல. நாங்க எல்லோருமே உங்கூட சேர்ந்து நின்னதா நெனச்சுக்கோ. வகுப்பே சேர்ந்து தோப்புக்கரணம் போட்டதா கற்பனை பண்ணு. வெயிட்டான வேலப்பன்கூட வேக வேகமா போட்டான்னு நெனச்சுப் பாரேன்...’’

சிரிப்புடன் வியப்பும் மேலிட்டது மனோவிற்கு. இதுவரை தன்னை கேலிதான் பண்ணி இருக்கிறார்கள். இன்று நகைச்சுவையுடனான ஆறுதல்.

‘‘கணக்கு டியூஷனும் வைக்க முடியலையா. நாங்கள்ளாம் சொல்லித் தாரோம். அதைவிட்டு ஒதுங்காமல் வரவைக்க முயற்சி செய். அப்புறம் வகுப்பில கணக்குல பர்ஸ்ட் நீதான். பிறகு ஸ்கூல்ல ஸ்டேட்ல. கணிதமேதை சகுந்தலாதேவி மாதிரி புதுசா பார்முலா கண்டுபிடிக்கறே. உன்னால நம் நாட்டோட பெருமை என்ன... கௌரவம் என்ன... நம்ம ஜனாதிபதியே உங்கிட்ட கணக்கு பற்றி கேட்கப்போறார்...’’

பாரதி தூண்டிவிடுவதில் மனோ முயற்சித்து... முயற்சித்து கணக்கை இஷ்டப்பாடமாகவே ஆக்கிக் கொண்டான்.

கொஞ்சம் கொஞ்சமாக வகுப்பில் அனைவரையும் வசீகரித்தான் பாரதி. வகுப்பில் மட்டுமல்ல வீட்டிலும் கற்பனையுடன் ஹாஸ்யத்தைக் கலந்து அனைவரையும் கலகலப்பூட்டுவான்.

காலை வேளைகளில் அப்பா ஆபிஸ் புறப்பட வேகமாக ரெடியாகிக் கொண்டிருப்பார். அம்மா பரபரப்புடன் சமைத்துக் கொண்டிப்பாள். பதைபதைக்கும் காலையாகி விடும். விரைந்து வருவான் பாரதி.

‘‘நிதானம் தாயே நிதானம். சோழ அரசியாக உங்களைக் கற்பனை பண்ணிக் கொள்ளுங்கள். அப்பாதான் குலோத்துங்க சோழர். ஸ்லோமோஷனில் மெதுவாக நீங்கள் பறந்தபடி பானத்தைக் கொண்டு வருகிறீர்கள். அப்பா ஆற அமர அமர்ந்து ரசித்து ருசித்து சாப்பிட்டுவிட்டு நிதானமாகப் பறந்து ஆபிஸ் செல்கிறார். ஸ்கூட்டரும் நிதானமாகப் பறக்கிறது கற்பனை செய்யுங்கள்’’ என்பான்.

சிரித்து விடுவார்கள் அம்மாவும் அப்பாவும். ‘‘போடா போக்கிரி, ஸ்கூலுக்கு ரெடியாகு’’ என்று செல்லமாகக் கோபித்துக் கொள்வாள் அம்மா. தாத்தாவையும் சும்மா விடுவதில்லை.

‘‘தாத்தா ப்ளீஸ் என்கூட ரெண்டு ஓவராவது விளையாடுங்க தாத்தா. உங்கள் உடல்வாகே தனிதான். உங்க இளமையை நெனச்சுப் பார்த்தா நீங்க தான் இப்ப டெண்டுல்கர். பல செஞ்சுரி கொடுக்கிற வீரர்... கற்பனை பண்ணுங்க... பந்தை சும்மா வீசித் தள்ளிடுவீங்க...’’

தோட்டத்தில் பேரனுக்காக விளையாடுவார் தாத்தா. அடிமனத்தில் பாரதி சொல்லியபடி டெண்டுல்கர் கற்பனையும் எட்டிப் பார்க்கும்.

அவனிடம் பரபரப்பையோ கோபத்தையோ பார்க்க முடியாது. வகுப்புத் தோழர்களிடம் அதுவே தனி மரியாதையை ஏற்படுத்தி இருந்தது.

வகுப்பு லீடராக இருக்கும் கோபிக்கு மட்டும் அது எரிச்சலைத் தந்தது. பாரதி மற்ற மாணவர்களைக் கவர்ந்து விட்டது பிடிக்கவேயில்லை. தன் நண்பர்களிடம் குறைப்பட்டுக்கொள்வான்.

‘‘பெரிய நகைச்சுவை மன்னன். சிரிக்க வைக்கிறானாம். இப்ப வந்துட்டு பெரிய ஹுரோவாகப் பார்க்கிறான்...’’

கோபிக்குப் படிப்பு வந்ததே தவிர பண்பு வளரவில்லை. எதற்கும் உணர்ச்சி வசப்பட்டு... பெயருக்கு ஏற்ப முன்கோபியாகவே இருந்தான். கர்வத்துடன் தனித்து இருக்கும் குணம் அவனுக்கு.

எப்படியாவது பாரதிக்கு அவமானத்தை உண்டாக்க வேண்டும். ஆசிரியரிடம் கெட்ட பெயர் வாங்கித் தந்துவிட வேண்டும் என்பதையே நினைவாகக் கொண்டிருந்தான். எதைச் சொல்லி வெறுப்பேற்ற? பாரதி நல்லவனாக, படிப்பவனாக இருந்தான். நகைச்சுவை கற்பனை இருக்குமே தவிர சிலரைப் போல் ஆசிரியர்களுக்குப் பெயர் சூட்டுவது, கேலி பண்ணுவது போன்ற செயல்களை எதிர்த்தான் அவன். வகுப்பிலும் அதைத் தவறென சுட்டிக்காட்டுவான்.

அன்று நாகு என்ற மாணவன், தன்னால் பள்ளியில் அழைத்துச் செல்லும் சுற்றுலாவுக்கு வர முடியவில்லையே என்று வருத்தப்பட்டுக் கொண்டிருந்தான். அவனைச் சிரிக்க வைத்து சமாதானப்படுத்தினான் பாரதி. சரித்திரப் பாடவகுப்பு அது. ஆசிரியர் வருவது தாமதமாகிவிட எல்லோரும் பேசிக்கொண்டுதான் இருந்தார்கள்.

ஆசிரியர் வந்ததும் லீடரான கோபி முறையிட்டான்.

‘‘சார்! நீங்க வர்ற வரைக்கும் காத்திருந்தோம். கொஞ்சம் பேர் படிச்சிட்டிருந்தாங்க. பாரதி ஒரே சிரிப்புக் காட்டி எல்லோரையும் படிக்கவிடாமல் செய்றான்.’’

புதுப் பையன் என்பதால் பாரதியைப் பற்றி அதிகம் தெரியவில்லை ஆசிரியருக்கு. சாதாரண குறும்புப் பையன்களைப் போல் எண்ணி அவனைக் கடிந்துகொண்டு எச்சரித்துவிட்டுப் போனார். வகுப்பு முழுவதுமே அவனுக்காகக் கவலைப்பட்டது. கோபியையும் அவன் நண்பர்களையும் தவிர.

குழந்தைகள் தினவிழா ஏற்பாடுகளால் பள்ளி களை கட்டி இருந்தது. பிரபல தொலைக்காட்சி நிறுவனம் அந்த தாலுகாவில் உள்ள சில பள்ளிகளுக்கிடையே விநாடி - வினா போட்டி நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருந்தது.

பல பள்ளிகளில் இருந்து குழந்தைகள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். ஸ்ரீசாரதாதேவியார் பள்ளியிலிருந்து பாரதி, கோபியுடன் இன்னும் சில மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அவர்களுடன் பாரதியைக் கண்டித்த சரித்திர ஆசிரியரும் உடன் செல்ல ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

உற்சாகத்துடன் பாரதி, கோபி, நண்பர்கள் அனைவரும் வேனில் ஏறினார்கள். வென்று வர வேண்டும் என்று சக மாணவர்கள் உற்சாகப்படுத்தி அனுப்பினார்கள். தொலைக்காட்சியில் நிகழ்ச்சியைப் பார்க்கவும் ஆவலாக இருந்தார்கள். நேரடி ஒளிபரப்பாம்.

வேனில் சரித்திர ஆசிரியர் அறிவுரைகள் கூறிக்கொண்டே வந்தார். மாணவர்களும் கவனத்துடன் கேட்டபடி வந்தார்கள்.

வேமாகப் போய்க்கொண்டிருந்த வேன் திடீரென்று பிரேக் போட்டு நின்றது. முன்னால் வரிசையாகக் கார்களும், பஸ்களும் நின்று கொண்டிருந்தன.

“மரம் ஏதோ குறுக்கா விழுந்திரிச்சாம். அதனால டிராபிக் ஜாம். கிளியர் ஆனாத்தான் போகலாம். நாம போறதுக்கு வேற வழியும் கிடையாது” டிரைவர் விசாரித்துவிட்டு வந்து சொன்னார்.

நேரம் நீண்டுகொண்டே போனது. நிலைமை சரியாகவில்லை. இப்போது வேனில் இருந்த மாணவர்களை திகில் பற்றிக் கொண்டது. ஆசிரியர் சமாதானம் சொன்னாலும் மனத்திற்குள் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார்.

செல்போனில் தொலைக்காட்சி நிறுவனத்துடன் தொடர்பு கொண்டார்கள். முடிந்தவரை வர முயன்று பார்க்குமாறும் வர முடியாவிட்டால் மற்ற பள்ளிகளை வைத்து நிகழ்ச்சிகளை நடத்தி விடுகிறோம். நிறுத்த முடியாது என்றார்கள்.

மாணவர்களுக்கு ஏமாற்றத்தில் அழுகையே வந்துவிட்டது. நிலைகொள்ளாமல் தவித்தார்கள்.

அப்பாடா! ஒரு வழியாய் நிலை சரியானது. ஆனால் போக்குவரத்து நெரிசலில் வண்டிக்கு வேகம் எடுப்பது கஷ்டமாக இருந்த்து. ஒரே பரபரப்புடன் போட்டி நடக்கும் இடத்திற்கு வந்தாகிவிட்டது.

அவர்கள் நுழையவும், போட்டிகள் ஆரம்பமாகவும் சரியாக இருந்தது. பரபரப்பு மாறாமலேயே வேகமாக போட்டிகளில் கலந்து கொண்டார்கள். மாணவர்களிடம் கேள்விகள் மாறி மாறி கேட்கப்பட்டன. ஸ்ரீசாரதாதேவியார் பள்ளியின் முறை வரும்போது யாராலும் சட்டென்று பதில் கூற இயலவில்லை. ஆனால் தன் பள்ளியின் சார்பில் பாரதி டாண் டாண் என்று பதில் சொன்னான். அவன் முகத்தில் அயற்சியே இல்லை. முடிவுகள் அறிவிக்கப்பட்டன. வெற்றி பெற்றது நம் சாரதாதேவியார் பள்ளியே! அதிலும் எல்லா மாணவர்களிலும் நேர்த்தியாக பதில் சொன்ன பாரதி பாராட்டுப் பெற்றான்.

தொலைக்காட்சியினர் அவனைக் கேள்விகள் கேட்டு சூழ்ந்து கொண்டனர்.

“கடைசி நிமிஷத்துல வந்தாலும் நிதானமா பதில் சொல்ல எப்படியப்பா முடிஞ்சது?”

சற்றுத் தயங்கிவிட்டு பாரதி சொன்னான். “டிராபிக் ஜாம் ஆனபோது வருத்தம்தான். உடனே நான் என்னை சுலபமாக்கிக் கிட்டேன். கொஞ்சம் பெருசா கற்பனை செஞ்சேன். ரொம்ப நேரம் நாம இப்படியே இருக்கப் போறோம். பெரிய கிரேன் வந்து ஒவ்வொரு காரா, பஸ்ஸா தூக்கி தூக்கி வச்சுட்டு வர பல வருஷங்க ஆயிடும். வேனை தூக்கி வைக்கும்போது நாங்க பெரியவங்களா ஆயிருப்போம். யாருக்கும் அடையாளம் தெரியாது. அம்மா, அப்பா, ஆசிரியர்கள், நண்பர்கள் எல்லாம் எப்படித் திகைச்சு

நிற்பாங்கன்னு ஒவ்வொருத்தரையா நினைச்சு... மனசை சந்தோஷமா வச்சுக்கிட்டேன். அதனால டென்ஷன் இல்லாம பதில் சொல்ல முடிஞ்சது.'' எல்லோரும் கைதட்டினார்கள். போட்டியை நடத்திய பேராசிரியர் அவன் கைகளைக் குலுக்கினார்.

பலே! நல்ல கற்பனை மனம்! இது சூழ்நிலையை யதார்த்தத்திற்குக் கொண்டுவரும். அதனால் மனசு அமைதிப்படும். இன்றைய பரபரப்பான உலகில் கெடுதல் இல்லாத ஹாஸ்ய உணர்வு எல்லோருக்குமே தேவையானதுதான். சின்ன வயதிலேயே இதைப் புரிந்து வைத்திருக்கிறாயே?''

பணிவாக சிரித்தான் பாரதி. அவனின் சரித்திர ஆசிரியர் அவனைப் புரிந்துகொண்ட விதத்தில் தட்டிக்கொடுத்தார். மற்ற தோழர்களோடு கோபியும் கைகுலுக்க முன்வந்தான்.

❍❍❍

# நாளெல்லாம் நல்ல நாள்

**வ**ருணும் வைஷ்ணவியும் சந்தோஷச் சிரிப்புடன் ஆனந்தா சூப்பர் மார்க்கெட்டிற்குள் நுழைந்தார்கள். அது அந்த ஊரில் வணிக வளாகத்தில் உள்ளது. சாக்லேட்டிலிருந்து எவர்சில்வர் பாத்திரம் வரை எல்லாமும் இருக்கும் அங்கே.

இந்த தினத்தை ஆனந்தமாக அனுபவிக்க திட்டம் போட்டிருந்தார்கள் இருவரும். அம்மா அப்பாவுடன் ஊரெல்லாம் சுற்ற வேண்டும். நிறைய பொருள்களை வாங்கிக் கொள்ள வேண்டும். முக்கியமாக எஸ்டேட் பங்களாவிற்கு நான்கைந்து நண்பர்களையும் அழைத்துச் செல்ல வேண்டும். அங்கிருந்து ஜீப்பில் போய் மிருகங்களைப் பார்க்க வேண்டும். படகுச் சவாரியும் போக வேண்டும்.

“அடுத்த லீவில் போகலாம்பா. தாத்தா பாட்டி வந்திருக்கிறார்கள் பாருங்கள். தனியாக விட முடியுமா?” அம்மா, அப்பா சொன்னபோது கோபம் தான் வந்தது.

“ச்சூ... வரட்டும்பா. அவங்களை நம்ம சித்தப்பா வீட்டில விட்டுட்டுப் போகலாமே. இதுதான் இந்த வயசானவங்களோட கஷ்டம்” என்று அலுத்துக் கொண்டதுடன் பிடிவாதம் பிடித்து ஒரு வழியாக சம்மதிக்க வைத்தாகி விட்டது. நாளை பாட்டி. தாத்தா, சித்தப்பா வீட்டிற்குப் போனதும் எஸ்டேட் பயணம் தான். பின்னே மதர்ஸ்டே கொண்டாட்டம் என்றால் சும்மாவா?

“வருண், அம்மாவுக்கு இந்த பூச்சாடியை வாங்கலாமா?” வைஷ்ணவி கேட்டாள்.

கிட்டத்தட்ட அவங்க தோழி செல்விம்மா தந்த பரிசு மாதிரி இருக்கே வேறு ஏதாவது பாரேன்.”

கண்ணாடி கிண்ணங்கள், வளையல்கள் எல்லாம் பார்த்தாகிவிட்டது. அட! என்னதான் வாங்குவது... தேடித் தேடி ஓய்ந்த போது அந்த அழகான போட்டோ பிரேம் கண்ணில் பட்டது. அதைத் தேர்ந்தெடுத்தாகியும் விட்டது.

“நாளைக்கு மதர்ஸ்டே இல்லையா? அம்மா, அப்பாவை போட்டோ எடுத்து இந்தப் பிரேமில் வைத்துவிடலாம்” குழந்தைகள் இருவரும் பேசிக் கொண்டார்கள்.

“எல்லாம் சரி... நாம கேட்டதுக்கு சரின்னு அம்மா அப்பா ஒத்துக்கலையே... வருத்தத்துடன் குறைப்பட்டாள் வைஷ்ணவி.

“அதுதான் பிறகு... நம்ம இஷ்டத்துக்கு விட்டுட்டாங்க இல்லை” வருண் சொல்ல பேசிக்கொண்டே வீடு திரும்பினார்கள்.

வீட்டிற்குள் சென்றதும் அம்மா அறிவித்தார். மாலை அப்பாவின் நண்பர் சியாமின் வீட்டு விருந்துக்குப் போக வேண்டுமாம். ஹய்யா! தொடர்ந்து விருந்துகள் தான். சியாம் அங்கிள் ரொம்ப வருடம் அமெரிக்காவில் இருந்தவராம். இப்போது இந்தியாவிற்கு மாற்றல் கேட்டு வந்தவராம். அவங்களுக்கும் இரண்டு குழந்தைகளாம்.

இரவு... அமெரிக்க குழந்தைகளுக்கு இணையாக வேண்டும் என்று பார்த்துப் பார்த்து உடை அணிந்து கொண்டார்கள் வைஷ்ணவியும் வருணும்.

சியாம் அங்கிள் வீட்டை நெருங்கியாகிவிட்டது. வீடு முழுவதும் வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

“ஓ! இவங்களும் நிச்சயம் மதர்ஸ்டேயும் கொண்டாடுறாங்கப்பா. எங்களை மட்டும் வேண்டான்னீங்களே” குறைப்பட்டுக் கொண்டனர்.

“வாங்க... வாங்க...’ சியாம் அங்கிளும் வேதா ஆன்ட்டியும் வரவேற்றனர். அவர்களின் குழந்தைகளைத் தேடினார்கள் நம் குழந்தைகள்.

பட்டுப் பாவாடை, தாவணி அணிந்த ஒரு பெண்ணும், ஜிப்பா, வேஷ்டி சகிதம் ஒரு பையனும் வெளிப்பட்டார்கள்.

“இவள்... மீனாட்சி... இது... சுந்தரம்.”

“இவங்களை உள்ளே அழைச்சுட்டுப் போங்க...” கட்டளையிட்டார் அங்கிள்.

அலங்கரிக்கப்பட்ட பூஜை அறையில் உட்கார வைக்கப்பட்டனர் அனைவரும். வருணும், வைஷ்ணவியும் திகைத்தார்கள். பார்ட்டி களை எதுவும் இல்லை. குடிப்பதற்கு முதலில் பானகம் வந்தது. சியாம் அங்கிள் பேசினார்.

“இன்னிக்கு எல்லோரும் வந்திருக்கறதல ரொம்ப மகிழ்ச்சி. இது எங்களுக்கு முக்கியமான நாள். நாங்க ரொம்ப வருஷம் வெளிநாட்டுல இருந்துட்டோம். அங்கே போய்தான் நம் பண்பாட்டோட, கலாச்சாரத்தோட மகிமையை உணர ஆரம்பிச்சோம். ஒவ்வொன்றையும் நம் பெரியவங்க அர்த்தத்தோட வாழ்ந்து காட்டினது புரிஞ்சு ஏத்துக்கிட்டாங்க. விரும்பவும் செய்றாங்க. ஏன்... வெளிநாட்டு குழந்தைங்க கிட்ட நம் பெருமையைச் சொல்லி ஆச்சர்யப்பட வைக்கிறாங்க...” அங்கிள் பேசி நிறுத்தியபோது மீனாட்சியும் சுந்தரமும் எழுந்தார்கள்.

“எங்க பெற்றோர்கள் எங்ககிட்ட எதிர்பார்த்தது பண்பையும் பாசத்தையும் தான். இந்தியா வரும்போது கூட சொன்னாங்க. நம்ம நாட்டுல நிறைய பிள்ளைங்க வெளிநாட்டு கலாச்சாரத்துக்கு அடிமையாயிருக்காங்க. உங்களால முடிஞ்ச அளவு இளம் வயசுக்காரங்க்கிட்ட எடுத்துச் சொல்லணும்னாங்க.”

“ஆமா! உதாரணமா நாளைக்கு மதர்ஸ்டேன்னு கடைகளிலே எல்லாம் ஒரே கூட்டம். பசங்களும் அம்மாவுக்குப் பரிசு வாங்கப் போறாங்க” என்றாள் மீனாட்சி வருத்தத்துடன்.

“அது நல்லதுதானே?” வருண், வைஷ்ணவியுடன் மற்ற குழந்தைகளும் கேட்டனர்.

“அப்படின்னா... மதர்ஸ்டே, பாதர்ஸ்டே எல்லாம் கொண்டாடணுமா? நாம எப்பவும் அம்மா, அப்பா கூட தானே இருக்கோம். நமக்கு எப்பவுமே அவங்க அன்பு கிடைக்குது. ஆனா வெளிநாட்டில அப்படியா? ஒரு வயசுக்கப்புறம் குழந்தைங்க பெற்றோரை விட்டுப் பிரிஞ்சுடறாங்க. சுதந்திரமா வாழறோம்னு இஷ்டப்படி எல்லாம் வாழ்ந்து பாதை தெரியாம பாழாகி, மனசு ஒடிஞ்சு விரக்தியா வாழறாங்க. நம்ம அன்பு, பாசம் எல்லாத்தையும் பார்த்து ஏங்கறாங்க... எப்பவாவது அம்மாவைப் பார்த்து பரிசு கொடுத்துட்டு வர்றாங்க... நமக்கு அது தேவை இல்லையே...” சுந்தரம் கேட்க சிறுவர்கள் யோசித்தார்கள்.

“நம்மை வளர்த்த்து அப்பா அம்மான்னா... அவங்களை சரியா வளர்த்து நமக்குக் கிடைக்கிறபடி கொடுத்தது தாத்தா... பாட்டி. இப்பவும் நம்ம மேலயும் எவ்வளவு பாசம் அவங்களுக்கு. ஆனா இப்ப இருக்கிற வேகமான சூழல்ல வயசானவங்களை விடுதிகள்ல விட்டுடறாங்க. பெரியவங்க பேச்சை எரிச்சலா

உணரக்கூடாது. அவங்க அன்பும், அறிவுரையும் நம்பள தப்பு செய்யாம காப்பாத்தும். நேர்வழியில் போக துணையாய் வரும்'' முடித்தாள் மீனாட்சி.

''இந்த விருந்தே என் அப்பா, அம்மாவுக்குத் தான்'' என்று நாற்காலியில் உட்கார்ந்திருந்த வயதான தன் பெற்றோர்களை அறிமுகப்படுத்திய சியாம் அங்கிள் தொடர்ந்து பேசினார். ''இவங்க தந்த அன்பும் அறிவும் தான் என்னை இந்த ஸ்தானத்துக்கு உயர்த்தி இருக்கு. நான் ரொம்ப வருஷம் வெளிநாட்ல இருந்திட்டேன். இனி வயசான அப்பா அம்மாவை எங்ககூட வச்சுக்கணும். அவங்க நிழல்ல என் குழந்தைங்க நம்ம தர்மப்படி வாழணும். இன்னிக்கு எங்க வீட்டுக்கு இவங்க வர்றதாலே பூஜை, விருந்துக்கெல்லாம் ஏற்பாடு பண்ணினோம். நிறைய குழந்தைங்க இங்க வந்திருக்காங்க... எல்லோருமே இதைப் பின்பற்றணும்'' உணர்ச்சி பொங்க கேட்டுக் கொண்டார்.

பலமான கைதட்டல் குழந்தைகளிடமிருந்து. வருணும், வைஷ்ணவியும் எழுந்தார்கள்.

''அங்கிளோட ஆசைய இன்னிக்கே நிறைவேற்றப்போறோம். மதர்ஸ்டேக்கு தடபுடலா ஏற்பாடு பண்ணினோம். அதுக்கெல்லாம் தேவையில்லைன்னு புரிஞ்சுது. நாளைக்கு பாட்டி, தாத்தாவை அனுப்பி விட்டு கொண்டாடுறதா இருந்தது. ஆனா நாளைக்கு அவங்களை வுட்டுட்டுப் போறதா இல்லை. கதையெல்லாம் பேசி, கொண்டாடி குடும்ப போட்டோ எடுத்து புதுசா அம்மாவுக்காக வாங்கின பிரேமில வைக்கப் போறோம்.''

மீண்டும் பலமான கைதட்டல்கள்.

''என்ன சிவா சந்தோஷம் தானே? நேற்று விருந்துக்கு கூப்பிட்ட போது மனக்குறையச் சொன்னீங்க. விருந்துல ஒரு தீர்வு கிடைக்குமுன்னு நான் நம்பினேன். நம்ம கொழந்தைங்க நல்லவங்க. அவங்கள பல சூழல்கள் திசை திருப்புது. இதமா பதமா எடுத்துச் சொன்னா புரிஞ்சுப்பாங்க.'' சியாம் அங்கிள் கேட்க சந்தோஷத்துடன் நன்றி கூறினார்கள் வைஷ்ணவி, வருணின் பெற்றோர்கள்.

❍❍❍

# மனிதம்

**ப**ள்ளிகளில் தேர்வுகள் ஆரம்பமாகிவிட்டன. கோடைக்கால விடுமுறைகள் ஆரம்பமாகப் போகின்றன. எனக்குக் கஷ்டமாக இருந்தது. இந்த முறையும் குழந்தைகளை ஏமாற்றி விடுவோமோ.

பல வருடங்களாக நினைத்த டைம் ஷேர் எனும் விடுமுறை வாசஸ்தலத்தை இந்த வருடமாவது வாங்கிவிடலாம் என்றுதான் நினைத்தேன். இந்த ஆண்டு எதிர்பாராத பல செலவுகள். முடியாமல் போய்க் கொண்டே இருக்கிறதே.

ரவியும் ரம்யாவும் சென்ற விடுமுறை நேரமே ஏமாற்றத்தால் வாடிப் போனார்கள். அடுத்த வருடம் கட்டாயம் வாங்கிவிட வேண்டும். குடும்பத்தோடு கொடைக்கானலில் இருந்துவிட்டு வரவேண்டும் என்று எத்தனை எதிர்பார்ப்போடு கேட்டுக்கொண்டார்கள்.

ரவிக்கு குதிரைச் சவாரி ரொம்பப் பிடிக்கும். ரம்யாவிற்கு படகுச் சவாரி, ஸ்வெட்டர்கள், மப்ளர்கள் எல்லாம் கூட ரெடி பண்ணி வைத்து விட்டார்கள். ரவி இயற்கை எழிலை அப்படியே படம் பிடிக்கப் போகிறனாம். இந்தப் பிறந்தநாளுக்கு அவன் கேட்டு வாங்கிக் கொண்டது கேமரா.

பரீட்சைகளும் முடிந்து விட்டன. குழந்தைகள் அதைப்பற்றிப் பேசவே இல்லை. மறந்து விட்டார்களோ? என்னதான் கொஞ்சம் நிம்மதியாக இருந்தாலும்... எனக்குள் ஒருவித அரிப்பு. “அப்பா எப்போதும் இப்படித்தான்! இந்தத் தடவையும் ஏமாற்றத்தான் போகிறார். கேட்டு என்ன பிரயோஜனம்” என்று என்மேல் நம்பிக்கை இல்லாமல் போய்விட்டார்களா? நாட்கள் ஆக ஆக என்னால் தாங்க முடியவில்லை. அவர்களை அழைத்தேன். மெதுவாக டைம் ஷேர் பற்றி நினைவுபடுத்தினேன்.

சட்டென்று வந்தது பதில். “அதெல்லாம் ஒண்ணும் வேண்டாம்ப்பா. நாம எங்கேயும் போக வேண்டாம். இங்கே நேரத்துக்கு சாப்பிடறோம்... ஸ்கூலுக்குப் போறோம். அமைதியா தூங்கறோம். அங்கே இலங்கையிலே ஈராக்கிலே தினசரி வாழ்க்கையைக்கூட வாழமுடியாம எத்தனை கஷ்டங்க! தினசரி டி.வி.யிலேயும் பார்க்கிறோமே. சாப்பாடு இல்ல... தண்ணி இல்ல... தூக்கம் இல்ல... எப்பவும் சண்டை... உயிர்ச்சேதம்... பசங்க பள்ளிக்கூடம் போக முடியாம தவிச்சுகிட்டு...”

சாதாரணமா நிம்மதியா இருந்தாப் போதும்பா. சந்தோஷம் நிறைய இருக்கு.

❍❍❍

# பொற்காலங்கள்

**ம**ணி காலை எட்டை நெருங்கிக் கொண்டிருந்தது. கதிரவன் தன் கதிர்களால் மோகனை எழுப்பியும் எழவில்லை. அவன் அம்மா வேகமாக வந்தாள்.

“மோகன் என்னடா இது... எத்தனை தடவை எழுப்புறது, ஸ்கூலுக்கு நேரமாச்சு... குளிச்சு முடிச்சுக் கிளம்ப வேண்டாமா?” பரபரத்தாள்.

“இன்னிக்கு போகலைம்மா...” சோம்பலுடன் திரும்பிப் படுத்தான் மோகன்.

“ஏம்பா உடம்புக்கு சரியில்லையா”“ கவலையுடன் தொட்டுப் பார்த்தாள் அம்மா.

“அதெல்லாம் ஒண்ணுமில்லை. இன்னிக்கு குழந்தைகள் தினம். பாடம் ஒன்றும் நடக்காது. யாராவது பேசுவாங்க... சாக்லேட் தருவாங்க. அவ்வளவுதான்” என்றான் சலிப்பாக.

“பெரியவங்க எல்லாம் பேச வர்றாங்க இல்ல; போய் கேட்க வேண்டாமா?”

“போம்மா... சுத்த போர்... விடும்மா” என்றபடி போர்த்திக் கொண்டான் மோகன். வருத்தத்துடன் போனாள் அம்மா. இப்படித்தான் சுதந்திர நாள். குடியரசு நாள் எந்த விழாவிலும் கலந்து கொள்ளாமல் தவிர்த்து வந்தான் அவன்.

மறுநாள் பள்ளிக்குச் சென்றதும்... பேச்செல்லாம் ஒரே சக்தியைப் பற்றியதாகவே இருந்தது. நேற்று விழாவிற்கு பேச்சாளர்களுடன் சர்வோதய சங்க உறுப்பினர்களும் வந்திருந்தார்களாம். திடீரென்று மாணவர்கள் சிலரை பேசச் சொன்னார்களாம். சக்தியும் பேசினானாம். அவனைத் தேர்ந்தெடுத்து பாராட்டினார்களாம். காந்திஜியின் சத்தியாகிரக நூற்றாண்டு விழா தென்னாப்பிரிக்காவிலிருக்கும் டர்பனில் நடக்கிறதாம். அதில் பங்கேற்க பல பள்ளிகளில் இருந்து தேர்ந்தெடுத்த பிள்ளைகளை அழைத்துக் கொண்டு போகிறார்களாம்.

அடுத்த மாதத்தில் ஒரு திங்கட்கிழமை.

பள்ளி கலையரங்கத்தில் வைத்து சிறப்பான விழாவிற்கு ஏற்பாடாகிக் கொண்டிருந்தது. மாணவர்கள் அனைவரும் குழுமி இருந்தனர். பெற்றோர்களும் வந்திருந்தார்கள். விழாவிற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமை ஏற்கப் போகிறாராம்.

இத்தனை கோலாகலமும் மாணவன் சக்திக்காகத் தான். காந்திஜியின் சத்தியாகிரக நூற்றாண்டு விழாவில் தமிழகத்திலிருந்து கலந்து கொண்ட மாணவர்களில் சக்தியும் ஒருவன். அவனால் அம்மாவட்டத்துக்கும், மாநிலத்துக்கும் பெருமை என்று பாராட்டு விழா நடக்கிறதாம். கலெக்டர் தலைமை ஏற்க விழா சிறப்பாக நடந்து கொண்டு இருந்த்து. சக்தியை அனைவரும் பாராட்டிப் பேசினார்கள். மாநாட்டில் எடுத்த திரைப்படம் போட்டுக் காண்பிக்கப்பட்டது.

டர்பன் தொழில்நுட்பப் பல்கலைக்கழக விளையாட்டுத் திடலில் அழகான அரங்கம். உலகின் பல்வேறு நாட்டைச் சேர்ந்த சிறுவர்களும் முக்கியப் பிரமுகர்களும் கலந்து கொண்டிருந்தனர். முன் வரிசையில் அமர்ந்த சிறுவர்களுக்கு மத்தியில் சக்தியும் அமர்ந்திருந்தான். அவனைப் பார்த்ததும் பள்ளிச் சிறுவர்கள் கை தட்டினார்கள்.

ஹிந்து, முஸ்லிம், கிறிஸ்தவம் போன்ற பல மதங்களின் பிரார்த்தனைகளுடன் விழா துவங்கியது. காந்திஜியின் பேத்தி ஏலாகாந்தி தென்னாப்பிரிக்காவில் இருக்கிறாராம். எம்.பி.யாகவும் பதவி வகித்தவராம். அங்குள்ள காந்தி டிரஸ்ட் உறுப்பினராம். அவர்தான் விழாவிற்கு ஏற்பாடு செய்தாராம்.

"ஓ! இந்தம்மா தான் காந்திஜியோட பேத்தியா?"

"ரொம்ப அமைதியா காந்தி தாத்தா மாதிரி சாந்தமா இருக்கிறாங்களே? அவங்களோட இருக்கிறவங்கள்ளாம் யாரு?"

குழந்தைகள் கேட்டார்கள்.

"கூட இருப்பது டர்பனிலுள்ள இந்திய தூதரக அதிகாரி, அந்நகர மேயர், நெல்சன் மண்டேலாவின் உதவியாளர் எல்லோரும் தான். இவங்க முன்னிலையில்தான் விழா நடந்தது..." சக்தி விளக்கினான்.

அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஜப்பான், பர்மா என்று பல நாட்டவர்கள் உரை நிகழ்த்தியதாகவும் எல்லாம் அஹிம்சையை மையமாக வைத்து நடந்ததாகவும் சக்தி தெரிவித்தான். திரையிலும் தெரிந்தது.

இப்போது ரெண்டாம் நாள் நிகழ்ச்சிகளைக் காண முடிந்தது.

இது ஐமாக்ஸ் தியேட்டராம். உள்ளே சினிமா ஸ்கிரீன் மிக மிக பெரியதாக இருக்குமாம். பக்கத்தில் நடக்கிறமாதிரி இருக்குமாம் காட்சிகள். 'மிஸ்டிக் இந்தியா' படம் போட்டுக் காட்டினார்களாம். அது இந்தியாவின் பெருமையை விளக்குகிற படமாம்.

மூன்றாவது நாள் விருது வழங்கும் விழாவையும் திரையில் காட்டினார்கள். புகழ்பெற்ற டர்பன் ஹால். உள்ளே அலங்காரத் தோற்றம். மாநாட்டில் பங்கு பெற்ற அனைவருக்கும் சிறப்பு விருந்து நடந்தது. விருந்து சாப்பிட்டபடியே மேடை நிகழ்ச்சியை கவனிக்க ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. நம் இந்தியா சுதந்திரம் பெற்ற நிகழ்ச்சியை நாட்டியமாகக் காட்டினார்கள். திரையில் எல்லாம் கண்டதில் மகிழ்ச்சி குழந்தைகளுக்கு.

"சக்தி கொடுத்து வச்சவன்டா. பெரிய பெரிய தலைவர்களைப் பார்த்துட்டான். இவ்வளவு பெரிய விருந்திலேயும் கலந்துகிட்டான்."

விழா மேடையில் தென்னாப்பிரிக்க சமூக சேவகர் திரு.சுலைமானுக்கும், இலங்கை சமூக சேவகர் திரு.ஆர்யரத்னே அவர்களுக்கும் காந்தி விருது வழங்கினார்கள். அனைத்து நாட்டு சிறுவர்களுக்கும் விழாவில் கலந்து கொண்டதற்கு பதக்கங்கள் வழங்கினார்கள்.

"இதோ... சக்திக்கு ஏலாகாந்தி அணிவிக்கிறார் பதக்கம்." மறுபடி பள்ளிச் சிறுவர்களிடையே உற்சாகம். சத்யாகிரக விழா நிகழ்ச்சிகள் நடக்கும் போது காந்திஜி வசித்த பீனிக்ஸ் வீடு, அவரின் அச்சுக்கூடம் எல்லாவற்றையும் காண்பித்தார்கள். இப்போது மீண்டும் சக்தி கூறினான்:

"இதோ இது... பீட்டர் மார்டிஸ்பர்க் ரயில் நிலையம். இங்கே வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சி நடந்தது.

ஆமாம்! நூறு வருடங்களுக்கு முன் காந்திஜி ஒரு வழக்கறிஞராக தென்னாப்பிரிக்காவிற்குச் சென்றார். அங்கு பிரிட்டோரியா, ஜோகன்ஸ்பர்க் போன்ற பல இடங்களில் இருக்க வேண்டியதிருந்தது.

ஒருசமயம் அவர் ரயில் பிரயாணத்தில் முதல் வகுப்பில் பயணம் செய்ய விரும்பினார். கறுப்பர் என்ற காரணத்தால் பிரிட்டிஷ் ரயிலதிகாரிகள் விடவில்லை. காந்திஜி பிடிவாதமாக இருந்தார். பீட்டர்மார்டிஸ்பர்க் என்ற இடத்திலிருந்த ரயில் நிலையத்திலிருந்து அவரைக் கீழே தள்ளி விட்டார்கள்.''

''இதுதான் அந்த ரயில் நிலையமும், நினைவுக்கல்லும்.''

''ச்சோ... பாவம்! காந்திஜி!'' என்று வேதனைப்பட்டார்கள் சிறுவர்கள்.

''இந்த நிகழ்ச்சிக்குப் பிறகுதான் அவருக்கு சத்தியாகிரக உணர்வே வந்தது. நம் நாட்டிற்கும் சுதந்திரம் கிடைத்தது. அது மட்டுமா? திரு நெல்சன் மாண்டேலாவும் காந்திஜியைப் பின்பற்றியே அஹிம்சை வழியிலேயே தென்னாப்பிரிக்காவிற்குச் சுதந்திரம் வாங்கித்தந்தார். பாபுஜி சத்தியாக்கிரகம் பண்ண ஆரம்பித்து நூறு வருடம் ஆகிறது. அதற்குத்தான் இந்த விழா. நாங்களும் கலந்து கொண்டோம்.''

சக்தி விவரமாக விளக்கினான். விழா இனிதே முடிந்தது. பலரும் சக்தியைப் பாராட்டினார்கள். சக்தியின் வகுப்பு மாணவர்கள் தனியே சூழ்ந்து கொண்டார்கள்.

''உன்னால எங்களுக்கெல்லாம் பெருமைடா சக்தி!''

''எப்படி திடீர்னு சர்வோதயக்குழு பேசச் சொன்னதும் பேசினாய். நீ ரொம்பவும் கூச்சப்படுவியே...?'' என்றான் மோகன்.

''ஆமாம்! எனக்கு மேடையில் பேச பயந்தான். ஆனா பள்ளி சார்பில் பேசணுங்கிற வேகம் எனக்கு கை கொடுத்தது. நம் பள்ளி விழாக்களால் தான் என்னால் பேச முடிந்தது. ஒவ்வொரு விழாவிலேயும் பெரியவங்க பேசற பேச்சை எல்லாம் குறிப்பெடுத்து வைத்துக்கொள்வேன். அடிக்கடி எடுத்துப் படிப்பேன். நல்ல விஷயங்களை நண்பர்களுக்குச் சொல்வேன். அதுதான் என்னை தென்னாப்பிரிக்கா போய் சத்தியாகிரக விழாவில் கலந்து கொள்ள வைத்தது.''

''பெரியவங்க விழாக்கள் நடத்தறது பொழுது போக்குக்காக இல்லை. நம்மை நாலும் தெரிந்து கொள்ள வைத்து பெரியவர்களாக்கத்தான்.'' மோகனுக்கு, சக்தியின் பேச்சுகள் பலமாகக் கேட்டுக் கொண்டே இருந்தன. வேகமாக வீடு திரும்பினான்.

அம்மா அப்பா இருவரும் வெளியே புறப்பட்டுக் கொண்டிருந்தனர்.

''திருக்குறள் கருத்தரங்கிற்கா... நானும் வருகிறேன் அம்மா. ஐந்து நிமிஷத்தில் ரெடியாகி விடுகிறேன்'' உற்சாகத்துடன் உள்ளே ஓடினான் மோகன். அம்மா அப்பா இருவரும் திகைப்புடன் நின்றனர். சந்தோஷமும் பொங்கிவந்தது.

# மாறிவரும் கோணங்கள்

**பா**ரதி வித்யாலயா பள்ளி வரவேற்பறையில் கவலையுடன் அமர்ந்திருந்தனர் கதிரின் பெற்றோர்கள். தன் மகனின் வகுப்பாசிரியர் வரச்சொல்லியிருந்ததால் சீக்கிரமே வந்து அவருக்காகக் காத்திருந்தனர்.

அவர்கள் கவலைப்படுவதற்கும் காரணம் இருந்தது. கொஞ்ச நாட்களாக கதிரின் போக்கு புதிராகவே இருந்தது. சிடுசிடுவென்று இருந்தான். முகம் கொடுத்துப் பேசுவதில்லை. படிப்பிலும் அக்கறை காட்டுவதில்லை. மார்க்குகளும் குறைந்து கொண்டே வந்தன.

ஒருநாள் கதிரின் அப்பாவிற்கு தொலைபேசி அழைப்பு வந்தது. பக்கத்துக்கடைக்காரர்தான் பேசினார்.

“சார் உங்க பையன் நாலஞ்சு நோட்டுகள் வாங்கினாரு. பணம் நாளைக்குத் தரேன்னாரு; இன்னும் தரலை. கேட்டுக்கோங்க அவரை.”

அந்தச்செய்தியைக் கேட்டு அவமானப்பட்டுப் போனார்கள் அப்பாவும் அம்மாவும்.

கதிரைக் கேட்டதற்கு சரியான பதில் வரவில்லை.

“எல்லாம் நான் கொடுத்துருவேன்” என்றான் எரிச்சலுடன்.

இன்னொரு நாள் வேலைக்காரி வள்ளி தயங்கித் தயங்கி ஒரு தகவல் சொன்னாள்:

“அம்மா நம்ம கதிர்த் தம்பி, நடேசத் தாத்தா ஜூஸ் கடையில ஜூஸ் குடிச்சுதாம். காசு நாளைக்குக் கொண்டு வர்றேன்னு சொல்லிச்சாம். பிறகு கொடுக்கவேயில்லையாம். சின்னப்பையன் இதைப்போய் அவங்க வீட்டுல ஏன் சொல்லணும்... பக்கத்து வீட்டுக்காரங்க வேற... முன்னேயெல்லாம் கரெக்டா இருக்குமே தம்பி என்னாச்சு வள்ளின்னு என்னைக் கேட்டாரு தாத்தா. எனக்கு ‘பக்’குன்னு ஆயிருச்சு. ஏம்மா கொஞ்ச நாளாவே தம்பி மொகத்திலே களையே காணும். உடம்பு சரியில்லையா? டாக்டர்கிட்ட காமிச்சீங்களா? எனக்கு மனசு கேக்கலை. கேக்காமையும் இருக்க முடியல்ல...”

வள்ளியின் தகவலிலிருந்து மேலும் வேதனையால் தவித்தார்கள் பெற்றோர்கள். டாக்டரிடம் கூட்டிப் போவதற்குள் படாத பாடுபட்டு விட்டார்கள். ஒருவழியாக டாக்டரிடம் கூட்டிக் கொண்டு போயாகிவிட்டது. டாக்டர் பரிசோதித்துவிட்டு, “உடல்நிலையில் எந்தக் கோளாறும் இல்லை. மனதளவில் சோர்ந்திருக்கிறான். ஒரு நல்ல மனோதத்துவரிடம் கூட்டிப் போங்கள் சரியாய்விடும்” என்று கூற குழம்பிப் போனார்கள் அப்பாவும் அம்மாவும்.

எங்காவது பயந்து விட்டானா? நண்பர்களிடம் சண்டையா? ஒன்றுமே புரியவில்லை அவர்களுக்கு.

“ஏன் எழில், நீ எப்போதாவது ஏதாவது சொன்னாயா? நன்றாக யோசித்துப் பாரேன்...” அப்பா, அம்மாவிடம் கேட்க...

“நானும் இதைத்தாங்க உங்களைக் கேக்கணும்னு நெனச்சேன். எனக்குத் தெரிஞ்சு நான் எதுவும் சொல்லலைங்க...” என்று அழ ஆரம்பித்துவிட்டாள் அம்மா.

“சரி... சரி... அழாதே. ஒரு காரணத்துக்காகத் தானே கேட்டேன். நமக்குத் தெரிஞ்சு அவனைக் கலங்க விட்டதில்லையே நாம்... அவன் ஒன்று கேட்டால் உடனே நிறைவேற்றிவிடுவோமே... அவனுக்குப் பிடிச்ச பொம்மைகள்... உடைகள் எதில் குறை வைத்தோம்” யோசித்து யோசித்து ஒரு முடிவிற்கு வந்தார்கள்.

கதிர் அவன் வகுப்பாசரியை யாழினி டீச்சர் மேல் அதிக மதிப்பு வைத்திருந்தான். அவரிடம் கதிரைப்பற்றிச் சொல்லலாம் என்று முடிவு எடுத்தார்கள். தொலைபேசியில் அவரைத் தொடர்பு கொண்டபோது இன்று நேரில் வரச்சொல்லி இருந்தார் யாழினி.

யாழினி பெயரைப் போன்றே இனிமையாகப் பேசினார். அன்புடன் தைரியம் தந்தார்.

“கவலைப்படாதீர்கள் மிஸ்டர் குணசீலன். கதிரின் அம்மாவுக்கு தைரியம் சொல்லுங்கள். சிறு குழந்தைகள் பலப்பல தாக்குதல்களை சந்திக்கும் சூழல்கள் ஏற்படும். இங்கே சற்று நேரம் அமர்ந்திருங்கள். நான் அவனை அழைத்துப் பேசுகிறேன். பிறகு முடிவு செய்யலாம்” என்று கூறிவிட்டுச் சென்றார்.

குணசீலன் குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டிருந்தார். அம்மா எழில் பல தெய்வங்களையும் வேண்டிக் கொண்டிருந்தாள்.

அரைமணி நேரம் ஆகி இருக்கும். யாழினி டீச்சர் அதே புன்னகையுடன் வந்தார்... சிறிது வருத்தமும் முகத்தில் தெரிந்தது.

“என்ன மேடம்... ஏதாவது சொன்னானா...?”

“பதற்றப்பட வேண்டாம். தயவுசெய்து உட்காருங்கள். உங்கள் இருவரிடமும் பேச வேண்டியதிருக்கிறது. உங்கள் மகன்மேல் உங்களுக்கு கொள்ளைப்பிரியமா... சிறுவயது முதல் ரொம்ப செல்லமோ...?”

“ஆமாம்... ஆமாம். எங்கள் உயிராயிற்றே அவன்.”

“அவன் கேட்டதையெல்லாம் வாங்கிக் கொடுத்து விடுவீர்களா?”

“ஆமாம்... உடனுக்குடன்...”

“காசு கேட்டால்...?”

ஆசையாக அடிக்கடி கொடுப்போம்.

“தவறு இங்கேதான்... அவன் மனநிலை மாறியதற்குக் காரணம் நீங்கள் இருவரும் தான்.”

“மேடம் என்ன சொல்கிறீர்கள்...?”

அம்மா எழில் தன்னை மீறி சத்தமாகக் கேட்டார்.

“உங்களை மிகவும் நேசிக்கிறானாம் கதிர். சின்ன வயதிலிருந்து அடிக்கடி ஆசையாக அவன் கேட்காமலேயே காசு கொடுப்பீர்களாம். அதை ரசிப்பீர்களாம். இப்போ ஏதோ டூ வீலர் கேட்டானாம். நீங்க சரியா பதில் சொல்லவில்லையாம். ஏதோ ஒரு தொகை கேட்டானாம். கொடுக்க வில்லையாம்...”

“ஐயோ… அதுவா… இந்த வயதில் டூ வீலர் எதுக்கு என்று தயங்கினோம். பெரிய தொகை நண்பனின் அண்ணாவிற்கு என்று கேட்டான். இந்த வயதில் கண்டவர்களுடன் சேர்ந்து பணத்தை அப்படி இப்படி என்று செலவு பண்ணும் பழக்கம் வந்துவிடும் என்றுதான் பதில் சொல்லலை. விசாரிக்கவும் கஷ்டமாக இருந்தது” என்றார் குணசீலன்.

“இது தான் தவறு. சின்ன வயதில் காசு கொடுத்து, அதையும் இதையும் வாங்கிக் கொடுத்து பழக்கி விடுகிறீர்கள். நீங்கள் மட்டுமல்ல பல பெற்றோர்கள் செல்லமாக பிள்ளைகளுக்குக் காசு கொடுத்து கெடுத்து விடுகிறார்கள். இப்போ கதிருக்கு நல்லதென்று நினைத்து தயங்கினதால் அவனுக்கு மனம் வேறுவிதத்தில் பாதிப்படைந்துவிட்டது.”

“பெற்றோர்கள் மாறி விட்டார்களோ? ஏன் தயங்குகிறார்கள்… பணம்தான் குறியா? என்று வெறுப்புடன் உங்களை ஒதுக்கி இருக்கிறான். படித்து என்னாகப் போகிறது என்று படிக்காமல் இருந்திருக்கிறான். உங்களுக்கு வெறுப்பேற்ற வேண்டும் என்று பல காரியங்களைச் செய்திருக்கிறான். இப்போது பேசி உங்கள் உள்ளத்தைப் புரியவைத்திருக்கிறேன். நல்ல பிள்ளை புரிந்து கொள்வான். இப்போதுள்ள குழந்தைகளின் மனம் எப்படி வேண்டுமானாலும் திசை திருப்பப்படும். நாம் தான் கவனமாக இருக்க வேண்டும். உங்களுக்குத் தெரிந்தவர்களிடமும் சொல்லுங்கள். ஆரம்பம் முதலே தேவையான சலுகைகள் கொடுத்து பக்குவமாக எடுத்துக் கூறி வளர்க்கச் சொல்லுங்கள்” என்று டீச்சர் கூறவும் – கண்ணீர் சிந்தினார்கள் இருவரும். தங்கள் தவறை உணர்ந்தார்கள். யாழினி டீச்சருக்கு நன்றி கூறினார்கள்.

வேறு அறையிலிருந்த கதிர் அங்கு வரவழைக்கப்பட்டான். அவன் கண்களும் கலங்கி இருந்தன.

அம்மாவும் அப்பாவும் அவனை அணைத்துக் கொண்டனர். கதிரும் அவர்களை புரிந்துகொண்டவிதமாக அவர்களின் கைகளை இறுக்கமாகப் பிடித்துக் கொண்டான். யாழினி டீச்சர் அதே புன்னகையுடன் கதிரின் தோள்களை தட்டிக்கொடுத்தார்.